408

லேட் ஸ்ரீ. பி. எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களுடைய அருமையான புத்தகங்கள்.

மகாலய பக்ஷமும் நவராத்திரியும்	அணா 1
காயத்ரீ ராமாயணம்	அணா 1

ரஹஸ்யார்த்தங்களை உணர்த்துவதில் மிகத் தேர்ச்சிபெற்ற இப்பெரியவரின் புத்தகங்கள் கிடைப்பது அரிது. ஆகையால் முந்துங்கள் !!

ஸ்ரீ பி. எஸ். ராமசுப்பையர் புஸ்தகம்.

லோக குருவாகிய பரமன் வருவானேன் விலை அணா 1

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

6 - MAR 1924

விளம்பரம்

உதாஸீந ஸாது ஸ்தோத்திரம்:—(பி. ஆர். சுந்தரராஜ ஐயர்) இது ஓர் அருமையான ஸம்ஸ்கிருத நூல். தேவதீர்த்தர் என்ற ஓர் யதியால் இயற்றப்பெற்றது. இது பாம்பின் நடை யெனப் பொருள் தரும் புஜங்கப் பிரயாதமாகிய சந்தத்தில் இன்னிசையான பதங்களால் இசைக்கப்பட்டது. உலகின்கண்ணுள்ள எல்லாவற்றுள்ளும் ஈசுவர விளக்கம் அதிகமாயுள்ள மஹான்களைப்பற்றிய திவ்யாச இச்சுலோகங்கள் நிகழ்கின்றன. இதில் மஹான்களுடைய லக்ஷணங்களைப்பற்றி விவரங்களநேக முள்ளன. தமிழ் மொழிபெயர்ப்பு, குறிப்புரைகளோடு வெளியிடப்பட்டது. இதன் விலை 6 அணா

தியானக்கிரம விஷயம்:—(கே. எஸ். ராமச்சந்திரய்யர்) தியானத்தின் பிரயோஜனமென்னவெனில், பிரதி மனுஷ்யனும் அவனவன் தினசரி நடபடிக்கைகளில் ஸத்யத்தையும், தர்மத்தையும் சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப்பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குதலேயாம். அதற்கு இலகுவாக "ஸற்குரு சரணங்களில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் ...யசிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் ...வஷ்டானத்தை நேர்மைப்படுத்தக்கூடிய ஓரோர் நற்சிந்த... வகுக்கப்பட்டு, தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிர...க்கின்றன. எல்லோரும் வாங்கிப்படித்து தியானி... பெறுமாறு விலை சொற்பமாக 4-அணா வீதம் எற்படு...கிறது.

பிரஹ்மஞான மந்திரம் மதுரை

விலை அணா 1] [தபாற் கூலி வேறு

இச்சமயம் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகம்.!!

மாதுஸ்ரீ அன்னிபெஸன்டு அம்மையார் சரித்திரச் சுருக்கம் அணா.

இப்புத்தகம் பிரஹ்மஸ்ரீ ப. நாராயணையர் எழுதியது. மிகவும் எளியதமிழில் யாவரும் அறியும்படி வரையப்பட்டது. அழகான தாளில் கண்ணுக்கு ரமணீயமாக அச்சிடப்பட்டது.

$1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பி 1 பிரதி பெறுக.

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

அணா 1] [தபாற் கூலி வேறு

கிடைத்தற் கரிது! அருமையான புத்தகம்!

எண்ணங்களின் ரகசியம்.

லேட் ப. நாராயண ஐயர் இயற்றியது.

படங்களுடன் கூடியது.

நல்ல எண்ணம் எண்ணுவதின் அவசியமும் கெட்ட எண்ணங்களைத் தவிர்த்தலின் முக்கியமும், இச்சிறு புத்தகத்தில நன்கு விளக்கப் படுகின்றன.

லேட் ஸ்ரீ ப. நாராயண ஐயர் அவர்களின் இதரப் புத்தகங்கள்.

ஸன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்	விலை	அணா 1.
பிரஹ்மக்ஞானமும் பிரஹ்மக்ஞான சபையும்		பை 6
பகவான் கௌதம புத்தரின் சரித்திரம்	,,	பை 6
லோக குருவின் அவதாரங்கள்	,,	பை 6
காயத்ரீ	,,	அணா 6
மோனம் என்பது ஞான வரம்பு	,,	பை 6
'ஹிந்து' என்பவன் எவன்?	,,	பை 1
ஹெலினம்பாள் அம்மையார் சரித்திரச் சுருக்கம்	,,	பை 6

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 8	1917-௵ அக்டோபர்௴ பிங்கள௵ அற்பிசி௴	பகுதி 6

தற்கால நிலைமை.

பிஹார் மாகாணத்தில் திக்காரி மஹாராஜகுமாரர் தன்னுடைய சொத்து யாவத்தையும் இந்தியப் பெண்களுக்குக் கல்விகற்பதற்கு ஒரு வித்யாலயம் ஸ்தாபிப்பதற்காகத் தர்மத்துக்கு எழுதிவைத்து இருக்கிறார். தானும் ஸர் ஸத்யேந்திர பிரசன்ன ஸிம்ஹாவும், மாமுதபாத்ராஜாவும், ஸ்ரீமான் ஷர்புதீனும், டாக்டர் ஸாப்ருவும், ஸர் அலி இமாமும், ஸ்ரீமான் ஸசீந்திர ஸிம்ஹாவும், ஸ்ரீமான் ஹாஸன் இமாமும், ஸ்ரீமான் விரஜேந்திரலாலும், ராய்பஹதூர் ஹரிஹரப்ரஸாதும், ஸ்ரீமான் சார்லஸ் ஆண்ட்ரூஸும், திக்காரி மஹாராணி ஸீதாதேவியும், தர்மகர்த்தர்க்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நாளிது அக்டோபர் மாசத்தில் தர்மகர்த்தாக்களுடைய முதற்சந்திப்பு நடைபெறுமாம். தானகர்த்தாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர் சகலருக்கும் ஜீவனாம்சத்துக்காகப் போதுமான ஏற்பாடுகள் செய்தாய்விட்டனவாம். இந்தியாவில் இதுகாறும் இவ்வளவு ஏராளமான பொருளை ஒரே தானமாகக் கொடுத்தவர்கள் கிடையாதாம். வருஷத்துக்கு 13 லக்ஷம் ரூபாய்

மொத்த வரும்படியாய் வரக்கூடியதாம். ஐந்து வயது முதல் 18 வயதுவரை, பெண்கள் கோஷாவாகயிருந்து கொண்டே படிக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமாம் கிரம்ப விசேஷமான நாகரீகமுள்ள மாதிரியாக கல்வி கற்பிக்கப்படுமாம். ஆனால் இந்த மதத்தார் ஜாதியார்தான் இக்கலாசாலையில் படிக்கலாம் என்ற நிர்ப்பந்தமாவது வேற்றுமையாவது கிடையாதாம்.

*
* *

40,000 ரூபாய் பெருமானமுள்ள 50 பிகா நிலத்தை இதே தர்மத்துக்கு ஸர்அலி இமாம் அவர்கள் இனமாகக் கொடுக்கப் போகிறாராம். அந்த இடத்தில் தான் இக்கலாசாலைக் கட்டடங்கள் ஏற்படப்போகின்றனவாம்.

*
* *

இதுவல்லவோ தர்மம். இதுவல்லவோ ஹிந்து மஹம்மதியர்களின் ஐகமத்தியம். இதுவல்லவோ இந்தியாவின் முன்னேற்றத்திற்கு நிச்சயமான அறிகுறி.

*
* *

கீழான ஜாதியாருடைய பிரயோஜனத்துக்காக மிகவும் சிலாக்கியமான ஹைஸ்கூல் ஸ்தாபிக்கப் போவதாகவும், அதை ஸ்தாபிப்பதற்கு வேண்டிய பொருளனைத்தும் பிராமணர்களுடையதாகவே யிருக்கப் போவதாயும், பிராமணரில்லாதவர்கள் அதற்காகக் கொடுக்கவரும் பணத்தை வேண்டாமென்று மறுக்கிறதாயும், இது கூடிய சீக்கிரத்தில் யாவரும் கண்கூடாய்க்காணும்படியாகும் என்றும், இம்முயற்சியில் ஸ்ரீமான் ஸி பி. ராமஸ்வாமி ஐயரும் மற்றும் சில முக்கியமான பிராமணோத்தமர்களும் முயற்சி செய்து வருகின்றனர் என்று மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாளவர்கள் தாமோதரர் பள்ளிக்கூடம் என்ற பஞ்சமர்க்குச்சம்பளமில்லாமல் கல்விகற்பிக்கும் வித்யாசாலையின் வருஷோத்

சவத்தில் சொன்னதைப் பார்க்க நாம் மிகவும் மகிழ்கிறோம். பஞ்சமர்களைத் தாழ்த்தியது பிராமணரா அல்லது மற்றவரா, அல்லது தள்ளுண்டஜாதியார் இப்போதிருக்கும் இழிவான ஸ்திதிக்குத் தாங்களே காரணமா அல்லது மற்றவர் காரணமா என்ற விசாரணையில் தலையிடவேண்டாம். ஆனால் அறிவிலும் சீலத்திலும் சிறந்தவன் தன்னைவிடக் குறைந்தவர்களுக்கு இந்த இரண்டு செல்வத்தையும் கொடுக்கவேண்டியது அவசியம் என்பது உண்மையானல், பிராமணர் பஞ்சமர்களுக்கு இதுகாறும் இவையிரண்டையும் கொடுக்க முயலவில்லையென்பது ஆக்ஷேபிக்க முடியாத உண்மை. முந்திய தவறுதலைப்பற்றி வாசா விசனிப்பதைக்காட்டிலும் அதை மாற்றுவதற்குக் காரியமாய் முயலுவது தான் மேன்மக்கள் முறை. அங்ஙனம் பிராமணர் முயன்று தங்கள் உத்தாரத்தை வகிப்பது தான் பிராமணர் தங்களுடைய சீரியகுணங்களைக் கைவிடவில்லையென்று காட்டுகிறது.

***

மன்னுயிரைக் காப்பதற்குத் தான் மிகவும் சிலாக்கியமென மதிக்கும் பொருளையெல்லாம் ஈசுவரார்ப்பணமாகத் தத்தம் செய்வதல்லவா மேன்மக்களுக்கு அடையாளம்? சுயநலம் பாராட்டுவது கீழ்மக்களுக்கு இயற்கை. சுயநலத்தைப் பரித்தியாகம் செய்யும் ஒவ்வொரு செய்கையாலும் செய்பவன் உயருகிறான். அவனுடன் அவன்குலமும் ஜாதியும், நாடும் உயருகிறது. ஒரு தேசத்திலோ, ஜாதியிலோ இவ்வித உதாரசீலர்கள் அதிகப்பட அதிகப்பட அந்ததேசமும் ஜாதியும் உயருகின்றன; அந்த தேசத்தினுடையவும் ஜாதியினுடையவும் வாழ்நாளும், மேன்மையும் நீள்கின்றன. இந்த உண்மையைக் கருத்தில்வைத்து இக்காலத்து நிகழும் சம்பவங்களை நோக்குவோம். இப்பொழுது பிராமணர் தங்களுடைய சுறுசுறுப்பினுலும், படிப்பினுலும், புக்திசாலித் தனத்தாலும், சீலத்தினுலும், சர்க்கார் உத்தியோகங்களிலும், மற்றும் தேசத்தில் முக்கியமாய்க் கருதப்படும்

உத்தியோகங்களிலும் அமர்ந்திருக்கிறார்கள். மற்றவர்களைக் காட்டிலும் இவர்கள் திருப்தியாயிருக்கக் காரணமிருக்கிறது. பொது ஜனங்களுக்குச் சுயாட்சி கொடுத்தால் பிராமணர் ஆளுகையாய்விடும், ஆகையால் பிராமணரல்லாதவர் பொருமை கொள்வார்கள் என்ற ஆக்ஷேபனைக்கு ஸிம்லாவில் இந்தியா சட்டநிரூபணசபையில் ஜன்மபூமியின் கைங்கரிய துரந்தரரான பண்டிதஸ்ரீ மதனமோஹன மாளவியர் அடியில்கண்ட மறுமொழியுரைத்தார். "பிராமணர் ஆளுகையாய் விடுமென்றல்லவோ ஆக்ஷேபணை செய்கிறார்கள். பிராமணர் இம்முயற்சியில் தலையிட்டு இந்தியா சுயாட்சி பெறுவதற்கு முதல்படியாக சில முக்கியமான சீர்திருத்தங்கள் கிடைக்க வேண்டுமென்று வற்புறுத்துவது சுயநலம் கருதியல்ல. தேசக்ஷேமத்தைநாடியே. அதை உண்மையென்று ருசுப்படுத்துவதற்காக, அவசியமானால் குறிப்பிட்ட காலத்துக்குப்பிராமணர் தங்களுக்குச் சில உரிமைகளும் அதிகாரங்களும் தேவையில்லையென்று வாக்குக்கொடுக்கத் தயாராகயிருக்கிறார்கள். இது பிராமணரல்லாதவர்களுடைய நன்னம்பிக்கையைப் பெறுவதற்காகவும், தேச க்ஷேமத்துக்காகவும் மனமொப்பிச்செய்யும் பரித்தியாகம்" என்று கூறினர்.

***

பிறப்பினால் மட்டும் பிராமணனாயிருப்பதுடன் மனத்தின் விசாலத்தாலும், உதாரகுணத்தாலும், பரித்தியாக சீலத்தாலும், பிராமணனாயிருப்பது எவ்வளவுமேன்மை! ஆகையால் மேற்கூறப்பட்டபடி தேசக்ஷேமத்துக்காக உழைத்துவருவதோடு, இன்னும் மேன்மேலும் ஊக்கத்தோடும், விடா முயற்சியோடும், பிறர்கூறும் வசைமொழிகளைப் பாராட்டாது, தமக்கு உரிமைகளைத் தேடாது! செய்யவேண்டிய கடமைகளைச் செய்துகொண்டு வருவது பிராமணர்கள் கடமையாகும். அங்ஙனம் செய்யச்செய்ய இவர்கள் பெருமையடைவார்கள். மற்றவரும் இவர்களைப் பின்பற்றி இவர்களைப்போல் நடக்க முயலுவார்கள். ஆகவே தேசத்துக்கே ஒரு விசேஷமான கீர்த்தி யுண்டாகும்.

அக்டோபர்மீ 1வ யன்று மாதுஸ்ரீ அன்னிபெஸண்டம்மை பிறந்தநாள். இந்நகரில் பிறந்து, சென்னைராஜதானியெல்லாம் மணிஐயர் என்று அபிமானமாய் யாவராலும் புகழப்பட்டு, சென்ற 3 மாதகாலமாக நாடெங்கும் மனக்கலக்கமும் தடுமாற்றமுமான கன இருள் சூழ்ந்திருந்த காலத்தில் மணிவிளக்காய் விளங்கி வழிகாட்டிவந்த ஸர் எஸ். சுப்பிரமணிய ஐயர் பிறந்தநாளும் இதுவே. கியாதி பெற்ற ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம்சந்த் காந்தியென்பவர் அக்டோபர்மீ 2ஆம் தேதியில் பிறந்தவர். இம்மூவரும் ஏறக்குறைய ஒரே தினத்தில் பிறந்தவர்களாகையால் மூவருடைய பிறப்பு நாட்களையும் பற்பல நகரங்களில் நாளிது அக்டோபர் 1வயில் கொண்டாடினார்கள். இம்மூவர்களும் இக்காலத்தில்ஒரேவிதமாக இந்தியரனைவருடைய நன்மதிப்புக்கும் நன்றியறிவுக்கும் பாத்தியப்பட்டவர்கள். நமது அன்னையவர்கள் நிர்ப்பந்தத்தில் இருந்தபோது அவர்களை ஒரு குறிப்பிட்ட தினத்துக்குள் விடுதலைசெய்யாத போனால் தாம் "ஸாத்விக எதிர்ப்பு" என்ற விரதத்தைக் கைக்கொள்ளத் தயாராக இருப்பதாக வெளியிட்ட சுத்தவீரனல்லவோ இந்த ஸ்ரீமான் காந்தி? ஸாத்விக எதிர்ப்பு என்பதற்கு காந்தியவர்களே "ஸத்யக்ராஹம்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். அதன் தாத்பரியமென்னவென்றால், தான் எது செய்யத்தகுந்தது என்று மனதில் கொள்ளுகிறாரோ அது அதிகாரிகளால் செய்யக்கூடாது என்று தடுக்கப்பட்டாலும், அதைச்செய்து முடிப்பது. அப்படிச்செய்யும் சமயத்தில் அதிகாரிகள் தன்னைக் கைதுசெய்தால் ஆக்ஷேபியாமல் கைதியாய்ப்போய் கச்சேரியில் கேட்கும்போது "ஆமாம் நான்செய்தது வாஸ்தவம். நான் சரியென்று நினைத்ததால் அப்படிச்செய்தேன். அதற்கு என்னதண்டனை விதித்தாலும் உடன்படுகிறேன். நீங்கள்செய்த உத்தரவு தவறு" என்று உறுதியாயும் மரியாதையாயும் சொல்லுதல். இதன்உண்மையென்னவென்றால், இப்படிச்செய்பவன் உண்மையைக் கைக்கொண்டு ஒருவருக்கும் கொடுமை விளையாமல் வரும்கெடுதிகளைத்தானே ஏற்றுக்கொண்டு

தண்டனைக்குகுட்படுவானேயாகில் தான் கொண்டகருத்து ஸத்யமாகையால் "ஸத்ய மேவ ஜபதி நாந்ருதம்" என்ற கொள்கைப்படி, இவன்கொண்டது ஜயமாகமுடியும் என்பது தான்.

* * *

தென் ஆப்பிரிக்காவில் அந்த தேசத்து வெள்ளைக்காரர்கள் இந்தியருடைய உரிமைகளைக் குறைத்து அவர்களை நாகரிக மற்ற காட்டுமனிதரைப்போல் நடத்திவந்த ஸமயத்திலே ஸ்ரீமான் காந்தியவர்கள் தலைமை பூண்டு, யாதொரு கலகமும் இல்லாமல், ஸாத்விக எதிர்ப்பினால் அத்தேசத்தவரையும், உலகத்தவரையும் தம்முடைய கக்ஷிதான் நியாயம் என்பதை ஏற்றுக்கொள்ளும்படி செய்தார். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப்போகக்கூடாது என்று ஒரு அநீதியான சட்டம் செய்தால் அதை மாற்றுவது எப்படி? ஒரு அனுமதிச் சீட்டு இல்லாமல் இந்தியன் வியாபாரம் செய்யக்கூடாது என்று இந்தியனுக்கு அகௌரவமான விதியொன்று இருந்தால் அதை எப்படி மாற்றுகிறது? சட்டசபையில் இந்தியன் போக அதிகாரமில்லை. மேலும் அந்தச்சட்டசபையில் உள்ள சட்ட நிரூபணர்கள் எல்லோரும் பெரும்பான்மையாக இந்தியருக்குவிரோதிகள். ஆகையால் திக்கற்ற இந்தியர் கைக்கொள்ளக்கூடிய பரிகாரம் என்ன என்றால் ஸ்ரீமான் காந்தியவர்கள் "ஸத்யக்ராஹம்" என்றார். அதாவது "தடுக்கப்பட்ட ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குப் போவேன், அனுமதிச் சீட்டு இல்லாமல் வியாபாரம் செய்வேன், என்னை அதிகாரி கைது செய்தால் அவனை ஆக்ஷேபிக்காமல், உடன்பட்டு காரா கிருஹத்தில் போட்டால் சாதாரணக் குற்றவாளி போல் வந்த தண்டனையையும் கொடுமைகளையும் நானே ஏற்றுக்கொள்வேன். உலகத்தில் நியாயம் என்பது இருக்குமானால் என் கக்ஷி நியாயமானால், ஏன் இவனும் இவனைப் போன்றவர்களும் நிரபராதிகளாயிருக்கும்போது கஷ்டப்படுகிறார்கள், என்று உலகத்தார் மனத்தில் தோன்றி நியாயம்

ஜயிக்கும் நான் கோரும் உரிமைகள் கிடைக்கும்" என்ற நம்பிக்கை. இது தென் ஆப்பிரிக்காவில் ஸ்ரீமான் காந்தியவர் அனுசரித்தமுறை, அம்மாதிரியே இந்தியாவிலும் தற்காலத்தில் ஆரம்பிப்பதாக ஸ்ரீமான் காந்தியவர்கள் விரதம் கொண்டனர். ஆனால் நல்லவேளையாக மாது ஸ்ரீ அம்மையவர்கள் வெளிவந்து விட்டதால் இந்த ஸமயத்தில் இவ்விரதத்தை அனுசரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

***

மேலும் ஸ்ரீமான் காந்தியவர்கள் இந்தியமந்திரி இந்தியாவுக்கு வரும் சமயத்தில் நாம் ஏகோபித்துக்கோரும் உரிமைகளை அவசியம் கொடுக்கவேண்டும், அவைகளைக் குறைக்காமல் கொடுத்தாலன்றி இந்தியர் திருப்தியடைய மாட்டார்கள் என்று ஒரு பெரிய மஹஜர் எழுதி இந்தியாவில் லக்ஷக்கணக்காக ஜனங்களிடம் வாசித்துக்காட்டி அவர்களிடம் கையெழுத்து வாங்கி, மந்திரியவர்களிடம் கொடுக்கவேண்டுமென்று ஸ்ரீமான் காந்தியவர்கள் சொல்லியிருக்கிறார். அதன்படி இந்தியாமுழுதும் முயன்று வருகிறார்கள். இந்தியாவின் முன்னேற்ற விஷயமாய் ஸ்ரீமான் காந்தியும், ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயா அவர்களும், மாது ஸ்ரீ பெஸண்டம்மையும் உழைத்துவருவது இந்த ஸ்தூல உலக பலத்தினால் மட்டுமல்ல. தங்களுடைய ஆத்மசக்தியினுடைய பிரபாவத்தால் உழைப்பதால் தான் இம்மூவருடைய முயற்சிகளும் பலத்தைத தரத்தக்கன, என்று யாவரும் அறியத்தக்கது.

***

வெளியில் வேறுபட்டவையாய்க் காணப்படும் பொருள்களை ஒன்றாய் அறிபவன் விவேகி. அப்பொருள்களைப் மற்றவர் ஒன்றென அறியும்படி செய்யக்கூடியவன் அவனைக் காட்டிலும் விசேஷமான யோகி. இந்தியாவில் தமிழன், தெலுங்கன், மலையாளி, கன்னடஸ்தன், மராட்டியன், ஹிந்துஸ்தானி, பங்காளி, பஞ்சாபி, மஹம்மதியன், ஹிந்து, சீக்கன், பார்ஸி, என்ற உணர்வுகளைப்போக்கி நாம் எல்

லோரும் இந்தியர்கள் என்ற ஏகிபாவத்தையுண்டாக்கும் மஹானுபாவர்கள் இம்மூவர்களும். மஹம்மதியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் இப்போது இருக்கும் ஒற்றுமைக்கும் முக்கிய காரணஸ்தர்கள் இவர்கள் என்பதை யாவரும் அறிவார்கள். தென்இந்தியாவில் பிராமணர் பிராமணரல்லாதவர்களுடைய ஒற்றுமையை ஸ்தாபிக்க எங்ஙனம் இவர்கள் முயலுகிறார்கள் என்பதையும் யாவரும் அறிவார்கள். கூடிய சீக்கிரத்தில் முற்றிலும் இவ்விஷயத்திலும் ஒற்றுமை ஏற்படும் என்று நம்புகிறோம்.

* * *

ஸிந்து மாகாணத்துத் தலைநகரான ஹைதராபாத்தில் நமது தலைவரவர்கள் பிறந்த நாளாகிய அக்டோபர்மீ 1௳ யன்று ஸிந்து தேசீயக்கலாசாலையை பிரஹ்மஞான வித்யாபீடத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் எர்னஸ்டு வுட் அவர்கள் துவக்கித்திறந்தல்மஹோத்ஸவத்தைநடத்தினார். அந்தசமயம் 1500 ஜனங்கள் கூடியிருந்தார்கள் ரூ 65,000 வரை இக்கல்லூரிக்கு கொடுப்பதாக வாக்குதானங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவாம். இதற்குள் 30 மாணுக்கர்கள் சேர்ந்திருக்கின்றனர்கள் என்று அறியச் சந்தோஷப்படுகிறோம். சர்க்கார் வேலைகளில் இம்மாதிரி கல்லூரிகளில் தேறிய மாணுக்கர்களை நியமிக்கமாட்டார்களென்பது வாஸ்தவமாயினும், இவர்களுக்கு ஊதியம் தேடும் அலுவல்கிடையாது என்று சொல்லுவது பேதமையாகும். கைத்தொழில், வியாபாரம் முதலிய துறைகளில் எவ்வளவோ ஏராளமான வேலைகள் காலியாயிருக்கின்றன. ஆகையால் யாரும் கவலைப்படக் காரணமேயில்லையென்று ஸ்ரீமான் வுட் அவர்கள் கூறினார்கள். பள்ளிக்கூடத்தைத்துவக்குவதற்கு அவசியமான சாமான்கள் எல்லாம் அதற்குள் சுறுசுறுப்பாய்ச்சேகரிக்கப்பட்டு விட்டதைப்பார்த்து யாவரும் மெச்சினார்கள். இது அம்மையவர்கள் பிறந்த நாளைக்கொண்டாடுவதில் சிறந்தமாதிரியாகுமல்லவா?

ஆர். ரங்கஸ்வாமி ஐயர்.

பதிவிரதா தர்மம்.

ஸ்திரீகளுக்கு பாதிவ்ரத்யத்தைப் பார்க்கிலும் வேறொரு சிறந்த விரதமில்லை. அது அவர்கள் எடுத்துக்கொள்ளும் விரதங்களிலெல்லாம் மிகவும் உயர்ந்தது. இப்பெரிய விரதத்தை நன்றாய்ப் பாதுகாத்துவந்த மாதர்கள் எப்பெரிய காரியத்தையும் எளிதில் செய்வர். அவர்களுக்கு அசாத்யமான காரியம் ஒன்றுமே இல்லையெனலாம். பூர்வகாலத்தில் நம் நாட்டில் நாரீமணிகளநேகர் இவ்விரதத்தைச் சரிவர நடத்தி அதன்மகிமையால் அநேக அற்புதகாரியங்களை முடித்துக் கற்பின்பெருமையை விளக்கிக் காட்டியுள்ளார். கற்பிற்குப் பேர்போன நமது மாத்ருபூமியாகிய இப்பாரத கண்டத்தில் அநேக உத்தமிகள் பதியே தெய்வமெனப் பாவித்துத் தமது கடமைகளைச்சீர்பெறச்செய்து வந்தனர். அவரது பெருமையையும் குணங்களையும் வியந்து திருவள்ளுவனாரும்

> தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
> பெய்யெனப்பெய்யுமழை

என்று கூறினர். முற்காலத்திலிருந்த கற்புடைப் பெண்டிருள் சுமதி என்பாள் ஒருத்தி. அவளது சரிதையை இங்கு வரைவோம்.

முன்னாளில் கௌசிகன் என்பவனோர் வேதியனிருந்தான். அவனது மனையாட்டியின் பெயர் சுமதி. அவனுக்கு பூர்வ ஜன்மபாபவசத்தால் குஷ்டரோகம் சம்பவித்தது. கற்பிறகாசியாகிய சுமதி தனது நாயகன் குஷ்டரோகியாயினும் கர்மவசத்தால் ஆனதற்கு யாதுசெய்வதென்று ஒருவாறு ஆறி, பர்த்தாவிடம் மிகுதியான அன்பு வைத்து அவனைத் தெய்வமெனப்பாவித்துப் பூஜைசெய்து வந்தாள். அவளிடம் சாந்தம், சீலம், பூததயைமுதலிய அரியகுணங்கள் நிரம்பியிருந்தன. இதனால் இவள் யாவராலும் நன்கு

மதிக்கப்பட்டாள், ஆயினும் கௌசிகனுக்குமட்டும் அவளிடம் பற்றில்லை. அவன் இயல்பாகவே தூர்க்குணமுள்ளவன். மிகுந்த கோபிஷ்டன். தன் நாயகியின் நற்குணங்களை நன்ருயறியாதவன். வீட்டிற்கு வந்தால் அவளை அடிப்பதிலும் வைவதிலும், பயமுறுத்துவதிலும் அவன் காலம் கழிந்தது. அவனது தீக்குணங்களுக்கெல்லாம் கோபமே முதற்காரணமாக விருந்தது. இக்கோபத்தின் கொடுமையைக் கவிகள்பலவாறு வர்ணித்துள்ளனர்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்
கோபமே அறிவினைக் குறைக்கும் குட்டநோய்
கோபமே தாயையும் கொல்லும் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ."

என்ற ஓர் புலவர் கூற்றுக்குக் கௌசிகனே லக்ஷியமாக இருந்தான். அவன் அவ்வாறிருந்தும் இம்மாது சிரோன்மணி அவனை சர்வோத்தமனுகப் பாவித்து பூசித்து வந்தாள்.

இத்தூர்க்குணங்களெல்லாம் போதாமல் பரத்தையரிடஞ் சேரலாகிய வோர் துன்மார்க்கமும் அந்தப்பார்ப்பானிட மிருந்தது. அவன் சொத்தெல்லாம் அக்காரியத்தில் செலவிட்டுச் சின்னுளில் மிகவும் ஏழையானுன். இருவரும் அவ்வூரை நீங்கி வேற்றூர்சென்று பிழைக்கும்படியாக நேர்ந்தது. அவ்வாறு காலம் செலல, ஒருநாள் கௌசிகன் தன் மனைவியை விளித்துப் பின்வருமாறு கூறலானுன். "நாயகி, நான் இன்றுமாலை ஒரு தாசியைப் பார்த்தேன். அவளிடம் என்மனது செல்லுகின்றது. அவள் சம்மதத்தைப் பெற்று அவள்வீட்டிற்கு என்னைக் கொண்டுபோய் விடு, இல்லாவிடில் என் பிராணன் போய்விடு"மென்று பலவாறு கூறி அவளை வேண்டினுன். இதைக்கேட்ட சுமதி, யாதொன்றும் தடைகூருது அவ்வண்ணமே செய்வதாக ஒப்புக்கொண்டாள். பாவம், யாதுசெய்வாள்! பர்த்தாவின் வேண்டுகோளை நிறைவேற்றுவது பதிவிரதைகளின் கடமையன்றே?

அன்றுமுதல் சுமதி வேசியின் சம்மதத்தைப் பெறுவதற்கான வழிகளை நாடினாள். தினந்தோறும் அதிகாலையிலெழுந்து தாசியின் தலைவாசலைத்தெளித்து விசித்திரமான கோலங்களைப்போட்டு அவளைக் களிக்கச்செய்வதே சரியான வழியெனத் தீர்மானித்தாள். அவ்வாறே அதிகாலையில் யாவருக்குந் தெரியாமல் சுமதி சென்று அவளது வாசலைப் பெருக்கிக் கோலமிட்டுச் சென்றாள். அதைக்கண்டோர்க்கு வியப்பு அதிகமாயிற்று. தாசிக்கும் யார் இவ்வாறு செய்கிறாரென்று காண வாஞ்சையுண்டானது. அதை உணரவேண்டுமென்ற அவாவுடன் அவள் ஒருநாள் அதிகாலையில் எழுந்து வாசலை நோக்கினாள். அப்போது சுமதி கோலமிட்டு வீட்டிற்குப் போகுந் தருணமாயிருந்தது. தாசி அவளிடம் சென்று, "நீங்கள் யார் அம்மா? உங்களைப்பார்த்தால் மகா உத்தமி போல் தோன்றுகின்றது. நீங்கள் என் வீடு தெளித்துப் பெருக்கிக் கோலமிட்டுப் போவதற்குக் காரணந்தான் யாதோ, எனக்குச் சொல்லும்" என்றாள். அதற்கு சுமதி, "அம்மா, என் பர்த்தா உன்னைக்காதலித்துள்ளார். அக்காதல் என்னும் நோயால் மனம் வாடுகிறார். அவரது இஷ்டத்தை நிறைவேற்ற உம்மைவேண்டுகிறேன்" எனப் பலவாறு தாசி இரங்கும் வண்ணம் வேண்டிக் கொண்டாள். தாசி இதைக்கேட்டு வியப்புற்று அவ்வேண்டுகோட்கிணங்கி அம்மாது சிரோன்மணியை நோக்கி "உமது கணவரை அழைத்துவாரும், உமது எண்ணத்தை நிறைவேற்றுகிறேன்" என்று மொழிந்தாள். அதுகேட்ட சுமதி அளவிறந்த களிப்புடன் வீடுசென்று கணவனைத்தொழுது, "சுவாமி அடியேன் இன்றுகாலை அத்தாசியைக்கண்டு உமது விருப்பத்தைத் தெரிவித்தேன், உம்மையழைத்துக்கொண்டு வரும்படி அவள் சொன்னாள். இனித்தங்களது இஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்" என்றாள்.

இதைக்கேட்ட கௌசிகன் ஆநந்த சாகரத்தில் மூழ்கி அன்றிரவே தன்னைக் கூட்டிக்கொண்டுபோக ஆஞ்ஞாபித்தான். இரவு வந்தது. கணவன் போஜனஞ் செய்தவுடன்

சுமதி தன்வேலைகளை எல்லாம் விரைவில் முடித்துக்கொண்டு, கணவனிடம்வந்து கைகூப்பித் தாங்கள் செல்லலாமா என வினவினள். அதற்கு அவன், "நான் நடக்கமுடியாமலிருக்கிறேன். என்னை ஒரு கூடையில் வைத்து எடுத்துச் செல்" என்றான். அவளும் அவ்விதமே அவனைக் கூடையில் வைத்து, மனக்கலக்கம் சிறிதுமில்லாமல் ஊரோசை யடங்கியதும் தன்தலைமேல் அக்கூடையை எடுத்துச்சென்றாள். இவளது வரவை எதிர் நோக்கியிருக்கும் தாசி, இந்தக்கோலத்தைக்கண்டு அதிசயித்து அவளது அன்பிற்கு மெச்சி, அவளைப் புகழ்ந்து வரவேற்றாள். பக்தியுடன் அக்கூடையைத்தாங்கி கௌசிகனைப் பள்ளியறைக்கு அழைத்துச் சென்றாள். அவனுள்ளங் களிக்குமாறு பலவிதமாக அவனுடன் உரையாடினள். விடியுமுன் கூடையில் முன்போலவே அவனைவைத்து சுமதி தன் இல்லம்புகுந்தாள். இவ்விதமாகப் பலநாளும் சுமதி தன் நாயகனது இஷ்டப்படி நடந்துவந்தாள். தாசிக்கு சுமதியுடன் பழகப்பழக நற்புத்தியும் நல்லநடையும் தெய்வபக்தியும் வந்தன. மத்தியான வேளைகளில் சுமதி தாசிவீட்டிற்குப்போய் அவளுக்குத்தலை பின்னி, ஆடையாபரணங்களால் அவளை அலங்கரித்து அவளது நட்பைப் பின்னும் பெருக்கிக்கொண்டாள். ஒருநாள் தாசி அக்கற்புடையாளைப்பார்த்து, "தேவி, நீங்கள் உமது கணவரை என்னிடம் கூட்டிக்கொண்டு வருவது மல்லாமல், எனக்கு அலங்காரங்களும் சிறிதும் பேதமின்றிச் செய்கிறீர்களே, உம்முடன் நட்புக்கொண்ட பின்னும் எனக்கு புத்திவராவிட்டால் யாதுபயன்? உமது வாழ்க்கைத் துணையான கௌசிகரை இனியான் தீண்டேன். நீங்கள் இவ்வளவு ரூபலாவண்ய முள்ளவராயிருக்க, உம்மை வெறுத்து என்னை அவர் இச்சிப்பது என்ன ஆச்சரியம். ஆதலின் இனிமேல் நான் அவரைத்தீண்டினல் எனக்கே பாவம் சம்பவிக்கும். இன்றுமுதல் நான் உம்மைத் தாய் போல பாவிப்பேன்," என்றனள். நல்லவர்களோடு சேர்ந்து பழகினவர்க்கும் நற்குணம் அமைவது உண்மையன்றோ?

இவ்விதம் கூறக்கேட்ட சுமதி தாசியைநோக்கி, "தங்காய்! நீ அவ்விதம் சொல்லக்கூடாது. புருஷாது மனம் ஒரு நிலையிலிருக்காது. அவராது மனம் சக்கரம்போலச் சுழன்று கொண்டிருக்கும். அதற்கேற்ப எண்ணங்களும் மாறிக்கொண்டிருக்குமாதலின், நாம் அவரது மனம்போல் நடந்தால் தான் நம்மிடம் அவர்க்குப பிரியமுண்டாகும். புருஷரது நினைவுபோல் நடப்பதே பெண்டிர்க்கு அழகு," என்று நானாவிதமாக நீதிகளை எடுத்துக்காட்டி, அவளைச் சமாதானப்படுத்தி, விடைபெற்று வீடுசேர்ந்து தன் வேலைகளைச் செய்துவந்தாள். இரவில் முன்போலவே தன் கணவனைத் தூக்கிச்சென்று, விடியுமுன் அவனை வீட்டிற்சேர்த்து வந்தனள். இவ்விதம் நெடுநாட்கள் கழிந்தன.

ஒருநாள் அவ்வூரில் அரசமாளிகையில் சில கள்ளர் இரவிற் புகுந்து ஏராளமான சொத்துக்களைக்கவர்ந்துசென்றனர். கடைச்சாமத்தில் இதையுணர்ந்த காவலர், கள்ளரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றிக் கடுகநடந்து ஒருவனத்தில் அவர் புகுந்ததாகக்கண்டு அதை வளைத்துக் கொண்டனர். இதைத் தெரிந்துகொண்ட கள்வர்கள் அங்குத் தபசுசெய்துகொண்டு நிஷ்டையிலிருந்த மாண்டவ்யமுனி முனர்தாம் திருடியவற்றை வைத்துவிட்டு புதர்களில் பதுங்கிக்கொண்டனர். வனத்தினுட்புகுந்த காவலர் முனிவரையும் அவர்பக்கத்திற்கிடந்த சொத்துக்களையும் கண்டு இவனே கள்வர்களின் தலைவனென நினைந்து, அவரை வளைத்துக்கொண்டு அரசனிடம் நடந்ததைத் தெரிவித்தார்கள். அரசன் திருடனைத்தூக்கிட்டுச் சொத்துக்களைக் கொணரக் கட்டளையிட்டான். அவ்வாறே காவலர் அம் மகரிஷியை நகர்புறத்தில் ஒரு மரத்தில் கழுத்திற் சுருக்கிட்டுக் கட்டிவிட்டார்கள். மகரிஷிக்கோ யோகநிஷ்டை சிறிதும் கலையவில்லை.

அன்றிரவு மிகவும் இருண்டிருந்தது. வானம் குமுறிற்று, இடையிடையே மின்னலும் இடியும் ஒன்றன்பின் ஒன்றாக வந்தன. கிள்ளிவிட்டுக் கிட்டநின்றாலும் தெரியா

து. அடியெடுத்து வைத்துப்போவதும் அசாத்தியமாக விருந்தது. அந்தஸ்ரிரவில் சுமதி வழக்கம்போல் தன்கணவனைத் தூக்கிச்சென்ருள். அன்று பகலில் மாண்டவ்யரைத் தூக்கிட்டவிஷயம் இவளுக்குத் தெரியாது. இவள் எப்போதும் செல்லும்வழியில் அவரைத்தூக்கிட்ட மரமிருப்பதும் அவள் அறியாள். அம்மரத்தண்டை வந்ததும், தற்செயலாய் விப்பிரன் தன் கால்களை நீட்டினன். நீட்டவே அவை நிஷ்டையிலிருக்கும் முனிவரைஎற்றின. அவரது நிஷ்டைகலைந்துவிட்டது. மாண்டவ்யர் உடனே நடந்தவற்றை உணர்ந்துகொண்டு கடுங்கோபங்கொண்டு பின் வருமாறு கூறினர். "அடே நராதமா! காரணமின்றித் தூங்கி யிருந்து அவஸ்தைப்படும் என்னை, நீ, உன் மனைவியின் தலைமேற் செல்லும் செருக்கால் உதைத்தாய் ஆதலால் நாளை உதயத்தில் மரணமடையக் கடவாய்" என்று சபித்தான். அதைக்கேட்ட சுமதி திடுக்கிட்டு, சூரியோதயத்தில் வைதவ்யம் வருமேயெனச்சிந்தித்து, துக்கத்துடன், 'நான் பதிவிரதையாக விருப்பின், பதிவிரதைகள் கூறும் மொழிகள் தவருது பலிக்குமாயின், நான் என் பதியின்வார்த்தைகளைத் தட்டாது நடந்தவளாயின், நான் ஒருவனுக்கே மாலையிட்டு அவனையன்றிப் பிறரை மனதிலும் கருதாதவளாயின் சூரியன் உதிக்காம லிருக்கக்கடவது. உதித்தால் சூரியனைச்சபிப்பேன்'' என்றனள்.

அம்மகாபதிவிரதையின் சாபத்திற்குப்பயந்து சூரியன் வெகுநாள் உதிக்கவில்லை. பூமிமுழுதும் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது. தேவதைகளெல்லோரும் பயந்து நடுங்கினர். பூமியில் யாகம், யக்ஞம், தேவாராதனை முதலிய யாவும் நின்றுவிட்டன. பக்ஷிகளும் மிருகங்களும், மனிதரும் மிகவும் வருந்தினர். மெய்ஞ்ஞானமேனும் சிறிதுமில்லாத அஞ்ஞானிகளின் மனத்தைக்காட்டிலும் அதிகமாகவே இருண்டுவிட்டதால் எல்லாலோகத்தினரும் மனம் தம்பித்துத் திகைத்தனர். இதைக்கண்டு பயங்கொண்ட தேவர்கள் பிரம்மாவிடம் போய்முறையிட்டு, பதிவிரதையான சுமதியின் சாபத்திற்குப்பயந்து சூரியன் வராதிருப்பது

முதலாகிய விஷயங்களை ஆதியோடந்தமாகக் கூறினர். அதைச்செவியுற்ற பிரமமா கூறலானர். "பதிவிரதையின் சாபத்திற்குப் பயந்து சூரியன் உதிக்கமாட்டான். அதன் மூலமாக சர்வலோகத்திற்கும் கேடு உண்டாயிற்று. நீங்கள் அனைவரும் அத்திரி மகாரிஷியின் பத்தினியாகிய அனசூயையிடம்போய் வேண்டிக்கொள்ளுங்கள். அம்மகாபத்தினியின் கிருபையால் உங்களுக்கு மேன்மையுண்டாகும். அவளாலன்றி வேறொருவராலும் இக்கேட்டைத்தீர்க்க முடியாது." இதைக்கேட்ட தேவர்கள் மிகவும் சந்தோஷமடைந்து அனசூயையின் ஆச்சிரமத்திற்குச் சென்று நிகழ்ந்ததைத் தெரிவித்தார்கள். அவ்வுத்தமி விரைந்தெழுந்து சுமதி இல்லத்தைநோக்கிச் சென்றாள். இதை நோக்கிய சுமதி அனசூயையை விரைந்தேற்றுக்கொண்டு, மிக்ககளிப்புடன் "அம்மா! உம்மைப்போன்ற மகா பதிவிரதா சிரோன்மணிகள் வர எமது குடிசை என்னபாக்யஞ் செய்ததோ தெரியவில்லை. நீங்களிங்கு எழுந்தருளியதினால் யாங்கள் கடைத்தேறியவரானோம். தாங்கள் வந்ததின் காரணம் என்ன? அதை யறிய விரும்புகிறேன்," என்றுகேட்டாள். அதற்கு அனசூயை, "தாயே! உலகத்தில் பாதிவ்ரத்யத்தின் மிக்கவிரதம ஒன்றுமில்லை. அதன் மகிமையால் எவ்விதமான அசாத்திய காரியத்தையும் சாதித்துக் கொள்ளலாம். உம்மைப்போன்ற மகாபதிவ்ரதையை நான் மூன்று லோகங்களிலும் காணகிலேன். உன்சாபத்திற்குப் பயந்து சூரியன் உதிக்கவில்லை. அதனால் உலகத்திற்கு எல்லாம் கேடுசூழ்ந்தது. ஆதலின் இரவி உதிக்கும்படி அனுக்கிரகம் செய். உன்பர்த்தா மரணமடைந்தாலும் மிகவும் அழகும், யௌவனமுமுள்ளவராகப் பிழைப்பாராதலால் வைதவ்யம் வருமென்ற பயம்வேண்டாம். கிருபைகூர்ந்து அருள்புரிக" என்றாள். அனசூயைவிரும்பியவாறே சுமதி ஆதித்தனை உதிக்க அனுக்கிரகித்தாள், உடனே சூரியன் உதித்தான். உலகைச்சூழ்ந்த இருள்எல்லாம் இருந்தவிடம்தெரியாது மறைந்தது. உலகத்தாரெல்லாம் குணகல்த்

தனர். அந்தக்ஷணத்தில் மாண்டவ்ய மகாமுனியின் சாபப்படி கௌசிகன் மரணமடைந்தான். அதுகண்ட சுமதி துயர்க்கடலுள்மூழ்கி வருந்தினாள். அனசூயை அவளுக்கு அபயமளித்து அவளைததேற்றி ஸ்நானஞ்செய்து தன் பர்த்தாவை மனத்திருத்தி அவரிருக்கும் திசையைநோக்கித் தொழுது, "நான் பதிவிரதையாயிருக்கும் பக்ஷத்தில் இக்கௌசிகன் உயிர்த்தெழக்கடவன்", என்றாள். அத்தருணம் அவ்விப்பிரன் மறுபடியும் உயிர்பெற்று, அதிக சுந்தரவடிவுடன் துயின்றெழுந்தவன் போல் எழுந்தான். சுமதி ஆனந்தக் கடலில்நீந்தி, ஆனந்தபாஷ்பம் சொரிந்து அனசூயையைப் பலவாறு மனமுருகிப் புகழ்ந்தாள். அனசூயை அவர்களை வாழ்த்தி விடைபெற்றுச்சென்றாள். பின்னர் கௌசிகனும் சுமதியும் வெகுகாலம் இல்லறச்செல்வத்தை ஏகமனதுடன் அனுபவித்து முடிவில் முக்திச்செல்வத்தையும் அடைந்தனர்.

சுமதி தன் கற்பின்பெருமையால் எத்தகைய அரிய காரியத்தைச் செவ்வனேசெய்து முடித்தனள். இவளைப்போல முற்காலத்தில் தமது கற்பால் விளங்கிய மாதர்கள் பலராவர். அவர்களது சரித்திரத்தை யறிவது ஒவ்வொரு பெண்ணுக்கும் அவசியம். புருஷரும் அச்சரித்திரத்தை யறிவதால் மேன்மை பெறுவர் என்பதில் ஐயமில்லை.

கௌஸல்யா.

பிரஹ்மக்ஞான தரிசனம் (பால பாடம்.)

அத்தியாயம்.—23.

மனித சரீர அமைப்பு—ஸ்தூல சரீரம்.

(தொடர்ச்சி)

நம்முடைய சரீரத்திற்கு அதன் சக்திக்கு மிஞ்சின வேலையைக் கொடுத்தாவது அல்லது யாதொரு வேலையும் கொடாமல் அதன்பேரில் அதிகமான பிரியம் வைத்தாவது அதைக் கெடுக்கக் கூடாது. நடு நிலைமையிலும் சகல விஷயங்களிலும் மிதமாயுமிருந்தால் அச்சரீரமானது எல்லா வேலைகளையும் செய்ய சக்தியுள்ளதாயிருக்கும். அதற்குக் கொடுக்கும் ஆகார விஷயத்திலும் அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏனெனில் அநேக விஷயங்கள் உசிதமான ஆகாரத்தைப் பொறுத்ததா யிருக்கின்றன.

அதற்கு மயக்கத்தையும் அதிக உற்சாகத்தையும் கொடுக்கக் கூடிய அன்னபானாதிகளைக் கொடுத்தால் வர வர முரட்டுத்தனமான தோற்றமும் கோபமுள்ள சுவபாவமும் அதற்குண்டாகும். அதனால் நமக்குத் துன்பம் நேரும்.

அதற்கு நேர்த்தியான சாத்விக ஆகாரத்தையும் நரம்புகளுக்குத் துடிப்பு உண்டாக்காததும் தாக சாந்தத்தைக் கொடுக்கக் கூடியதுமான பானத்தையும் கொடுத்து வந்தால் அது வர வர அழகான நாகரீகமுள்ள தோற்றமும் உறுதியும் பலமுமுள்ள நரம்புகளை உடையதாயிருக்கும்.

இவ்விஷயத்தில் அதிக லெகுவாய் அதை நம் வசப் படுத்தலாம். அதிக உஷ்ணமும் உறைப்பும் புளிப்புமுள்ள ராஜஸ ஆகாரங்களையும் மாமிசாதிகளையும் கொடுத்து வந்தால் அது அவைகளையே விரும்பும். சாமானியமான சாத்விக ஆகாரத்தில் வெறுப்படையும். அதிக மயக்கத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும் ஆகாரத்தினால் சரீரமானது நம் வசப்படாமலிருப்பதை நாம் அறிந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாய் அதற்குச்சுத்தமான சாத்விக ஆகா

ரத்தைக்கொடுத்து வந்தால் அது வர வர சாத்விக ஆகாரத்தில் விருப்பம் கொண்டு ராஜச ஆகாரத்தைத் தள்ளிவிடும்.

மற்றப் பிராணிகளைப்போல அது முதலில் முரட்டுத்தனம் செய்யும். பலமான சுவையுள்ள ராஜச ஆகாரத்துக்கே இச்சைகொள்ளும். ஆனால் நாம் எஜமானென்பதையும் அது நமமுடைய ஊழியனென்பதையும் மனதில் வைத்துக்கொண்டு நம்முடைய விடாமுயற்சியால் அதற்கு சாத்விக ஆகாரத்தையே கொடுத்து வருவோமாகில் நம்மிஷ்டப்படி யது நடக்கும். இவ்விதம் ஒரு வருஷ காலம் அதற்கு சாத்விக ஆகாரத்தைப் பழக்கம் பண்ணிவிட்டால் ராஜச ஆகாரத்தைப் பார்க்கும்போதே அதற்கு வெறுப்பு உண்டாகும். நம் வழக்கத்தை யனுசரித்து நடக்கும் பிராணிகளாயிருக்கிறோம். கெட்ட வழக்கங்களுக்கு நாம் எப்படி அடிமைகளாக ஆய்விடுகிறோமோ அப்படியே நல்ல வழக்கங்களும் நமக்கு சுவாதீனமாகும். இதை அனேக ஜனங்கள் மறந்துவிடுகிறார்கள்.

நீ பால்யமாயிருக்கும்போதே உன் சரீரத்திற்கு அதிக சுத்தமும் சாந்தமுமான ஆகாரத்தைக் கொடுத்து பயிர்ச்சி செய். அப்படிச் செய்து வந்தால் மற்ற ஆகாரங்களில் அதற்குப் பிரியம் இருக்கமாட்டாது. நம்மை எதிர்த்துத் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியாதவைகளும் நமக்கு இளைய சகோதிரர்களாயு மிருக்கிற வாயில்லாப் பிராணிகளையும் பக்ஷிகளையும் மீன்களையும் கொலைசெய்து மகத்தான பாபகர்மங்களைச் செய்கிறவர்களுடன், நாம் சேரமாட்டோம்.

ஒரே ஜன்மத்தில் உன் சரீரத்தை முற்றிலும் மாற்றிவிட முடியாது. ஆனால் அதை சன்மார்க்கத்தில் விருத்திசெய்து அடுத்த ஜன்மத்தில் அதைவிட நேர்த்தியான சரீரம் அமையும்படி செய்யலாம். நீ இப்போது அணிந்திருக்கிற சரீரம் உன்னுடைய வேண்டுகோளின்பேரில் அமைக்கப்பட்டது. முன் ஜன்மத்தில் உன் எண்ணங்கள் ஆசைகள் செய்கைகளுக்குத் தக்கபடி அமைக்கப்பட்டிருக்கிறது.

உன் கட்டளைப்படி ஒரு அச்சு சூக்ஷ்மமாய் அமைத்து பூலோகத்துக்கு அனுப்பப்பட்டு அந்த அச்சை யனுசரித்து ஸ்தூல சரீரம் அமைக்கப்பட்டது. ஆகையால் அதன் உருவத்தை மாற்றமுடியாது. ஆனால் அதை உன்னிஷ்டப் படி நல்ல அல்லது கெட்ட சாமான்கள் உள்ளதாய் மாற்றக் கூடும்.

மானஸ சரீரம் உண்டாகும் விதத்தைப் பற்றி கற்றுக் கொண்ட விஷயம் உனக்கு ஞாபகமிருக்கிறதா? அவ்விதமே உன் ஸ்தூல சரீரத்துக்கும் சாமான்களை நீ தெரிந்தெடுக்கலாம். அவ்விதமாய் அதன் தோற்றத்திலும் உபயோகத்திலும் அதிக வித்தியாசத்தை யுண்டுபண்ணலாம்.

நீ ஒரு ரூபாயை எடுத்துக்கொண்டு ஒரு சாமான் வாங்கக் கடைக்குப் போயிருக்கலாமே. நீ வாங்க விரும்பிய சாமான் ஒரு அழகான பொம்மை. அதை ஒரு கடையில் பார்க்கிறாய். அதன் விலையைக் கேட்கிறாய். ஐந்து ரூபா யென்று கடைக்காரன் சொல்லுகிறான். உன்னால் வாங்கமுடியவில்லை. வேறொரு கடைக்குப் போகிறாய். அங்கே இதைப்போல ஒரு பொம்மை யிருக்கிறது. ஆனால் அது கரடுமுரடாயும் ஆபாசமாயு மிருக்கிறது. விலையோ ஒரு ரூபாயாக விருக்கிறது. அந்தப் பொம்மை நன்றாய் வேலை செய்யமாட்டாதென்றும் அதிக நாள் நீடித்திருக்க மாட்டாதென்றும் உனக்குத் தெரிந்தும் அதை வாங்க வேண்டியது தவிர உனக்கு வேறே கதியில்லை. அதை வைத்துத் தான் நீ காலம் கழிக்கவேண்டும். இந்த வித்தியாசம் தான நல்ல சாமான்களால் அமைக்கப்பட்ட சரீரத்துக்கும் கெட்ட சாமான்களால் அமைக்கப்பட்ட சரீரத்துக்கும் உள்ளது.

உன் ஸ்தூல சரீரம் நன்றாய் வேலை செய்யவேண்டுமென்றும் உனக்கு சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டுமென்றும் நீடித்திருக்க வேண்டுமென்றும் உனக் கிஷ்டமிருந்தால் நேர்த்தியான சாமான்களால் அதை அமைக்க வேண்டும்.

வி. வெங்குசாமி ஐயர்.

உதய நக்ஷத்திர ஸங்கத்தின் ஏற்பாடுகளும் பிரவிருத்திகளும். *

பூர்வ பீடிகை.

உதய நக்ஷத்திர ஸங்கத்தினங்கத்தினர்களை யிச்சிறிய புத்தகத்தில் ஸ்ரீமான் அருண்டேல் அவர்கள் வெளியிட்டிருக்கும் அபிப்ராயங்களைச் சற்று நன்கு கவனிக்கும்படி வேண்டப் பிரியப்படுகிறேன். அதைக் கவனமாய் வாசித்த பிறகு எனது அபிப்பிராயம் யாதெனில் அவர் நமது ஸங்கம் தன் வேலையைச் சரிவர நடத்துவதற்குரிய மார்க்கங்களை சரியா யெடுத்துக் காட்டியிருக்கிறாரென்பதே. அவரெடுத்துக் காட்டியிருக்கிற குறிப்புகளின் உள்ளபிப்பிராயத்தை நன்ருய் நமது அங்கத்தினர்கள் அறிந்தனுபவிக்க வேண்டுமென்கிற ஆவலுடனிருக்கிறேன்.

நாம் வருவதாக எதிர் பார்க்கும் மஹாபுருஷன் இப்போது இவ்வுலகின்கண் நடைபெறுகிற மதங்களைப் போக்கி வேறு ஒரு புதிய மதத்தை ஸ்தாபனம் செய்யப்போகிருர் என்று நினைப்பதைப் பார்க்கிலும் அந்த ஜகத்குரு இப்பொழுதுள்ள மதங்களை உஜ்ஜீவித்து அவைகளை நமது நடபடிக்கைகளில் கொண்டுவரும்படியான மார்க்கங்களை யுபதேசிப்பாரென்று நினைத்தலே நமது கடமையென்று ஸ்ரீமான் அருண்டேல் கூறுவது உண்மையே யாகும். இவ்வுலகம் வேண்டுவது யாதெனில் ஒருபுதிய மதமல்ல, இருப்பதை உத்தாரணம் செய்யும் சக்தியே; அது ஒரு ஜகத்குருவால்தான் ஸாத்யப்படும். ஒன்று மட்டும் நிச்சயம்; அதாவது, அவர் கொடுக்கும் உபதேசங்களா லுண்டாகும் சக்தியானது நமக்கு அன்பு என்பதை, நமது வீடுகளிலும், இவ்வுலக முழுதிலும் எப்படி யெல்லா முபயோகப்படுத்தலாம் என்பதை நன்கு விளக்கிக் காட்டும்.

ஸ்ரீமான் அருண்டேல், இச்சங்கம் ஒரு நாட்டாருக்கு மட்டும், அல்லது ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமென்பதில்லை, இது உலகத்தோரெல்லோருக்கும் சொந்த

---

* மொழி பெயர்ப்பாசிரியர்—ஆர். ஸ்ரீநிவாஸ ஐயர் எம். ஏ. திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜ்.

மானது என்பதையும் காட்டியிருக்கிறார். நமது அங்கத்தினர்களுள் பற்பல நாட்டோர்களும் பற்பல மதஸ்தர்களும் இருக்கிறார்கள்; ஆகையால் நமது சங்கத்தின் நோக்கங்களும் கொள்கைகளும் எல்லாரு மங்கீகாரம் பண்ணி யாதரிக்கத்தகுந்த வண்ண மிருக்கவேண்டும். வரப்போகிற ஜகத்குரு யாரென்பதைப் பற்றியும் அவரெவ்வித வுபதேசங்கள் கொடுக்கப்போகிறாரென்பதைப்பற்றியும்அங்கத்தினர்களுக்குள் பற்பல அபிப்பிராயங்க ளிருக்குமாகிலும், இச்சங்கம் கோஷிப்பது யாதெனில் ஒரு பெரிய ஜகத்குரு வரப்போகிறார், அவரளிக்கு முபதேசங்க ளெல்லாம் அன்பு என்பதை அஸ்திவாரமாகக் கொண்டிருக்கு மென்பது மட்டுமேயாம். ஆகையால் நமது அங்கத்தினர்கள் நமது சங்கத்தின் கொள்கைகள் விசாலமாகவும் சகலமான மதஸ்தர்களும் நாட்டோர்களும் ஒப்புக்கொள்ளும் விதமாகவுமிருக்கும்படிக்கு அவைகளைக் காப்பாற்றவேண்டும் என்றும், தாங்களிவ்வுலகின் துயர்களைத் தங்களாலானவரையில் குறைக்கும்படிக்கு ஸத்கர்மங்களில் பிரவிருத்தித்துக் கொண்டிருப்பதே தங்களுடைய முக்கிய தர்மமென்றுணரவேண்டுமென்றும் நானதிக ஆவலுடன் அபேக்ஷிக்கிறேன்.

கடைசியாக, ஸ்ரீமான் அருண்டேல் எடுத்துக்காட்டியிருக்கிற நமது வேலையின் விதங்களையும், தற்கால நாகரீகத்துக்குரிய விசேஷ ஸம்பவங்களுக்கும் நமது அங்கத்தினர்களுக்குமுள்ள ஸம்பந்தத்தைப்பற்றியவர் உரைக்கும் அபிப்பிராயங்களையும் நமது அங்கத்தினர்கள் நன்றாகக் கவனிக்கும்படி வேண்டுகிறேன். தற்கால லௌகிக ப்ரவிருத்திமுறைகளை (Modern business methods) நாமுபயோகிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும், உலகின் வழிகளைச் சீர்திருத்தி மேன்மேலும் நல்ல கதிக்கு நம்மைக் கொண்டுவரு முத்தேசத்துட னிருக்கப்பட்ட எல்லா பிரயத்தினங்களோடும் ஸபைகளோடும் நாம் கலந்து வேலைசெய்யவேண்டு மென்பதையும் பற்றி அவர் நன்குவற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்.

இங்ஙனம் நாம் நடந்து வருவோமாகில் நமது சங்கமிப்புவியிலேற்பட்டதின் பலன் கைகூடும். பாமர் வருந்தருணத்தி லிப்புவியோர்கள், முன்பு பாலஸ்தீனுவிலவதரித்த கிருஸ்துவுக்கு இருக்கவிடமளிக்கவில்லையென்று இடுக்கண் விளைத்த யூதர்களைப்போலாகாமல், அவருக்கு நல்வரவுகூறி, ஆதரித்துக்கொண்டாடி யனுபவித்து அவரருளைப்பெற்று ஆநந்திப்பார்கள்.

ஜே. கிருஷ்ணமூர்த்தி,
தலைவன்.

I-நமது பிரவிருத்தியின் ஸாரம்.

ஒரு பெரிய விசேஷமான தத்துவத்தை யறியும்படியான பாக்கியத்தையும் அதிருஷ்டத்தையும் பெற்றவர்கள் தாங்க ளறிந்த விஷயத்தை உலகத்தோர்க ளங்கீகாரம் பண்ணும்படியான ரீதியாய் சகல ஜனங்களுக்கு மளிக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள். தாங்கள் முதன் முதலில் எப்படி யதை யடையப் பெற்றிருந்தாலும், தங்களுக்கு எவ்வித மதைச் சொன்னாலது பரம உற்சாகத்தைக் கொடுப்பதாயிருந்தாலும் நாமதைப் பற்றிக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை, எப்படிச் சொன்னா லுலகத்தோர்களுக்கு ஹிதத்தைச் செய்யுமோ அவ்விதமே நாமதை பிரசுரப்படுத்த வேண்டும்.

சாதாரணமான லௌக்கிகப்பிரவிருத்திகளில் ஒரு வஸ்துவை பொதுஜனங்களினிடையிலதிகமாய் பிரசாரப்படுத்த வேண்டியிருந்தால், அதை ஜனங்கள் பார்த்து, அபிமானித்து, வாங்கி, அநுபவித்துப்பிறருக்குமதைசிபார்சு செய்யும் வண்ணம் நாமதை அவர்களிடையில் கொண்டு போக வேண்டி யிருக்கிறது. அந்தப்பதார்த்தம் உண்மையி லுபயோக மற்றதாயிருக்கும் பக்ஷத்தில் அதிக காலம் நிலை பெறாது; ஏனென்றால் கொஞ்ச காலம் தனது பிரயோஜன மற்றிருக்கும் தன்மை வெளிப்படாமலிருந்து அதை ஜனங்கள்

வாங்கி யுபயோகிக்கும்படி யவர்களேமாற்றப் பட்டாலும், காலக்கிரமத்தில் பெரும்பான்மையோர் எதற்கு நிச்சயமான குணமும் பிரயோஜனமு மிருக்கின்றனவோ அதைத் தான் ஸ்திரமாகக் கொண்டாடுவார்கள்.

உதய நக்ஷத்திர ஸங்கத்தின் அங்கத்தினர்களான நமக்கு உலகத்தோர் சிலரும் அனுபவிக்கத் தகுந்த ஒரு மஹாதத்துவமானது அளிக்கப்பட்டிருக்கிறது. அது நமக்கு மட்டுமென்பதல்ல, பிறருடைய உபயோகத்திற்கே நாமதை கைக்கொண்டிருக்கிறோம். அத் தத்துவ மளவிலா விலையுள்ளது, அதை யறிய வறிய அநேக தாத்பர்யங்களை யுடையது. சமீப காலத்தி லொரு ஜகத்குரு அவதரிக்கப் போகிறாரென்னும் தத்துவத்தை விட வேறு ஒரு பெரிய விஷயம் உலகத்தோருக்கு ஒரு ஸங்கத்தாலும் கொடுக்கப்பட முடியாது. ஆனாலத்தகைய ஞானமோ ஸாமான்யமானதல்ல, அதிக ஜாக்கிரதையாய் வகிக்கத் தக்கது; ஏனென்றாலதோடு கூட நமக்கு ஒரு பெரிய பொறுப்புமுண்டு.

இதை யடையப் பெற்ற நாமவ் விஷயத்தை யுலக முழுதும் பிரசுரப்படுத்த வேண்டும். சகல மதஸ்தர்களுக்கும் எல்லா ஸ்திதியிலிருக்கப் பட்டவர்களுக்கும் பொதுவான தத்வமா மிது. நாமதை யெவ்விதத்தி லனுபவித்திருந்தாலும், அது எவ்வளவு பாவங்களுடையதென்பதையும் எத்தனை விதங்களா யதை யனுபவிக்கலாம் என்பதையும் நாம் நன்குணர்தல் வேண்டும். அப்படி யுணர்ந்தாற்றான் நாம் தற்காலம் பழகி வருகிற ஜனங்களுக்குத் தகுந்தபடி யதை யுபயோகப் படுத்த முடியும்.

இக்காரணம் பற்றியே நமது ஸங்கத் தலைவர் நமது ஸங்கம் கிருஸ்து வருவதாகவாவது, மைத்ரேயர் வருவாரென்றாவது, அல்லது வேறு ஒரு பிரத்யேக ஜகதகுரு ரக்ஷகர்த்தாவரப்போகிறார் என்றாவது கோஷிக்கிறதில்லையென்றும், வரும் மஹான் பழைய சமயங்களை வேரோடறுத்துப்

புதிய மதமொன்றை ஸ்தாபிக்கப் போகிருரென்று சொல்லாமல், ஸகல மதஸ்தர்களும் சமயக் கொள்கைக்காரர்களும் ஒப்புக்கொள்ளும்படிக்கு பொதுவாக ஒரு மஹாபுருஷன் அவதரிக்கப் போகிருரென்பதையே கூறுகிருரென்றும் சமீபத்தி லுரைத்திருக்கிருர். தனித் தனியாக அங்கத்தினர்கள் தங்களை யுற்சாகப்படுத்தி யதிகமான உபகாரத்தைச் செய்யத் தூண்டுகிற வண்ணமும், அவர்களுக்கு எவ்விதமாக அத் தத்துவத்தை மேற்கொண்டால் அதின் வாஸ்தவத் தன்மை நன்கு விளங்குமோ அவ்விதமாகவும் அதை யனுபவிக்கலாம். ஆனல் இச்சங்கமோ உங்களுக்குமெனக்கும் மாத்திரமல்ல, உலகத்திற்காக ஏற்பட்டது. நாம் செய்ய மேற்கொண்டிருக்கிற வேலையில் நமது ஸ்வபாவம், ஸமுதாய விதிகள், கொள்கைகள், தாபிப்பிராயங்கள் எல்லாவற்றையும் மறந்து உலகத்தின் அவசியமென்னவென்பதையே கருதவேண்டும். ஏனென்ருல் இவ்வுலகின் கண்ணுள்ள எல்லா ஸ்தலங்களு மவருடைய வாஸஸ்தானமே, ஒவ்வொரு இடத்திலுள்ள ஜனங்களும் அவருக்கு நல்வரவு கூறி யழைக்கவேண்டும்.

ஆகையால் நமது ஸங்கத்தின் பொதுவான கொள்கையாதெனில், இவ்வுலகத்திலுள்ள ஸகல மதங்களிலும் வர்க்கங்களிலுமுள்ள ஜனங்களுக்குச் சொந்தமான ஒரு தத்துவம் நம்முடைய வசமிருக்கிறது, அதை யவர்க ளிந்த ஜன்மத்திலறிந்து அதனுடைய குணத்தை யனுபவிக்க முடியாமலிருந்தாலும் அது எல்லாருக்கும் சொந்தமான தென்பதேயாம். நாமதை யொரு வழியாக அண்டியிருக்கிருேம், எல்லா வழிகளிலு மதை நாமடைய வில்லை யென்பதை நாம் மறக்கக் கூடாது. இவ்வுலகின் கண் எவ்வளவு மனிதர்கள் உளரோ அவ்வளவு மார்க்கங்க ளத் தத்துவத்தை யடைய உண்டு என்று நாம் நன் குணர்தல் வேண்டும். இவ்வுலகிலுள்ள பற்பல மதங்கள் காலக்கிரமத்தில் தாங்க ளடைகிற பலவிதமான பாவங்களிலெல்லாம் உள் ளடங்கியிருக்கிற தத்வங்களை வெளியிடாமல் மறைக்கிற ஸ்தூல சமயாசாரங்களையும் மூட விசுவாஸங்களையும் நாம் கட்டாயம் நமது

ஸங்கத்தின் ஆரம்பத்திலாவது கடந்து அதுகளுக் கிடு படாமலிருக்கவேண்டும்.

தனது குழந்தைகளிடத்தி லதிகப் பிரியத்தோடு அக் குழந்தைகளுடைய வீட்டை சீர்திருத்தி வைக்கும் பொருட்டும் அவர்களுக்கு உற்சாகத்தையும் மனவெழுச்சியையு மளித்து, அவர்கள் தங்கள் ஜீவிதத்தின் உத்தேசத்தையும் பிரயோஜனத்தையும் அறியும்படிக்கு உபதேசங்கள் கொடுக்கும் பொருட்டும் ஒரு பிதாவை யக் குழந்தைகளெதிர் பார்ப்பதுபோல் வரும் பரமகுருவை சகலரும் எதிர் பார்க்கும்படி நாமவர்களைப் பழக்கப்படுத்த வேண்டும். அவாகள் அவரை கிருஸ்துவென்று பெயரிட்டழைத்தாலும், மைத்ரேய ரென்றழைத்தாலும், இன்னும் தங்களுக்கு மனோஹரமாயிருந்து மாதிருகைபோல் விளங்கா நிற்கும் வேறு எந்த மஹா புருஷனின் பெயரா லழைத்தாலும், பாதகமேயில்லை. ஸம்ஸாரமாகிய குடும்பத்திற்கு ஜ்யேஷ்டப் பிராதாவை எதிர் நோக்கும்படிக்கு நாம் எல்லோரையும் பழக்கிக்கொண்டு வருவோமாகில் அவர்கள் அவரை அவரது மஹா ஞானத்தினாலும் அளவிலாக் கருணையினாலும் கண்டறிவார்கள். ஏனெனில் அவர் வருவது நிச்சயமே. அப்படியில்லாமல் அவர் கிருஸ்துவென்றோ அல்லது அவர்களுக்கு முன்னமேயே தெரிந்திருக்கக் கூடிய வேறு ஒரு மஹானென்றோ நாம் வற்புறுத்திக் கூறுவோமாகில் நேரிடுவது யாது? ஜனங்கள் தாங்களெவ்வித மம்மஹா புருஷனிருப்பாரென்று மனதில் தீர்மானித்து வைக்கிறார்களோ அவ்விதமவர் தோன்றினாற்றான் அவரை யறியமுடியும். ஈசன் பற்பல மாதிரியாக தன்னிச்சையை நிறைவேற்றிக் கொள்கிறாரென்பது உண்மையாகிலு மிது மனுஷ்ய ஸ்வபாவமேயாம். ஆகையா லுண்மையில் நமது ஜ்யேஷ்டப்பிரதாவாய் விளங்கு மப்பரமகுரு அவதரிக்கும்போது ஜனங்க ளவரெப்படியெல்லாம் நடந்துகொள்வாரென்று நினைத்து வந்தார்களோ அவ்விதத்திற்கு மாறாக அம் மஹான் நடந்துகொள்வதாயிருந்தால் அவரை யறிய முடியாமலிருந்து விடுவார்கள்.

இதற்கிணங்க வேலை செய்யப் பிரியப்படும் இச்சங்கத்தின் அபிவிருத்தி கர்த்தாக்கள் தாங்கள் தங்களுடைய அந்தரங்க அபிப்பிராயங்களை ஸங்கத்தினபிப்பிராயங்களாக வெளியிடாமல் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும், இச்சங்கத்தில் சேரவேண்டுமென்கிறவர்க ளனைவரு மித் தகைய விசாலதைக் கிணங்கி நடப்பதே முக்கிய கடமையாகப் பாவிக்கவேண்டுமென்பதை நன் கெடுத் துரைக்க வேண்டும். அவர்கள் தங்களது மனோ விசாரங்களிலும் ஆத்மஸ்வபாவத்திலு மதிவிசாலதையை யடைந்து, அவர்களுக்குக் கிடைத்திருக்கும் இச்சங்கத்தின் முக்கியக் கொள்கையான தத்துவத்தின் உதவியால், நாமிருக்கு மிடத்திலுள்ள ஜனங்கள் நம்மிடத்திலிருந்து நடை யுடை பாவனைகளிலும் இன்னு மிதர ஸந்தர்ப்பங்களாலும் அதிகமாய் வித்யாசமுள்ளவர்களாயிருந்தாலும் அவர்களுடைய குணகுணங்களையும் அவசியங்களையும் முயற்சி யில்லாமல் ஸ்வபாவமா யறியக் கூடிய ஜீவ தயவையும் மனோமார்தவத்தையும் அடைய வேண்டும்.

ஆகையால் முதலில் எந்த இடத்தில் அறிவுக்கவசிய மிருக்கிறதென்றும் எந்த விதத்திலதை வெளியிட்டாலது உடனே ஒப்புக்கொள்ளப் படுமென்றும் நாமறியவேண்டும். நாம் பற்பல விடங்களிலிதைக் குறித்துப் பிரஸங்கங்கள் செய்யும்போது ஆங்காங்குள்ள ஜனங்களுடைய வெவ்வேறு ஸ்வபாவங்களுக்கு மிது ஹிதத்தைச் செய்யும்வண்ணம் நாமதைப் பிரசுரப் படுத்தவேண்டும்.

ஒரு பெரிய தத்துவத்தை பற்பல ஸ்வபாவமுள்ளவர்களெல்லோரு மங்கீகாரம் பண்ணிக் கொள்ளும்படிக்கு பல விதமாகப்பக்குவப்படுத்திக் கொடுப்பதில் யாதொரு பரஸ்பர விரோதமும் கிடையாது. அந்தத் தத்துவமோ வெகு விசாலமானது, அது பலமுகமாக பிரசுரப்படுத்தும்படியானது. நாமறிவில் சிறுவர்களாயிருக்கும்போது ஒரு தத்துவத்தின் ஒரு பாகம் முழுமைபோல் தோன்றக்கூடும். ஆனல் அப்பரம புருஷரின் ஞானத்தையும் கருணையையும்

ஜகத்தில் பிரவகிக்கச்செய்யத்தகுந்த அவரது தூதர்களாக நாமாகவேண்டுமானுல் அத்தத்துவபாகத்தை முழுமையாக வே யறியவேண்டியதுமன்றி அதின் ஸாரத்தை நன்குணர வேண்டும்; அப்படிச் செய்தால்தான் நாம் அதன் பல முகங்களைக் கொண்டு இவ்வுலகிலதைப் பிறருக் குரைக்கும் போது அவ்வெல்லா முகங்களிலும் அந்தத் தத்துவத்தின் ஸாரம் விளங்கும்.

மேலும் நமது தினசரி நடபடிக்கைகளிலிருந்த விஷ யத்தை யுபயோகப்படுவதைப் பற்றி நாம் ஒருவித அசிரத் தையுடனிருக்கக்கூடாது. பெரிய ஆத்மிக தத்வங்களை நாம் நம்முடைய ஸாதாரண பிரவிருத்திகளிலிருந்து விலக்கி வைப்பதும், அவைகளைப்பிறருக்கு வெளியிடுவதிலச்சப்படு வதும் சரியல்ல, அது தவறேயாகும். நம்மைப் பற்றின வரைக்கும் வெகு மேன்மையடைந்ததும், சாசுவதமான தும், நன்மை செய்யக்கூடியதா யிருந்துமித் தத்வங்களை வெளியிட்டனுபவத்திற்குக் கொண்டுவராதிருப்பது நமக் குக்குறைவே. சிலர் நாம் பரம பாவனமான விஷயங்க ளோடு விளையாடக் கூடாதென்று சொல்வதுண்டு. ஆனுல் உண்மையில் எப்போது அத்தகைய விஷயங்கள் நமது விளையாட்டுகளில் கொண்டுவரப்படுகிறனவோ அப்போது தான் நாமாத்மிக மார்க்கத்தின் தத்வங்களை யணிகிறிற்கி ருேம்.

(இன்னும் வரும்.)

அருண்டேல்.

அன்னி பெஸண்டு என்ற கர்மயோகி.

நாளிது அக்டோபர்மீ 1உயில் நமது பிரஹ்மக்ஞான சபையின் அக்கிராஸனாதிபதியாகிய அன்னிபெஸண்டு அம்மையாரின் 71-வது அப்தபூர்த்தியானது உலகத்தில் பற்பல இடங்களிலும் மதுரையிலும் பிரஹ்மக்ஞான சபையின் தலைமை ஸ்தானமாகிய அடையாற்றிலும் வெகு விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. அவர்களது வாழ்நாளில் சென்ற 43 வருஷங்கள் பரோபகாரத்தின் பொருட்டே அர்ப்பணம் செய்யப்பட்டு இடைவிடாத நன்முயற்சிகளால் நிரம்பப்பட்டு நிற்கின்றன. அவர்கள் நாஸ்திக மதக்கொள்கைகளைக் கைக்கொண்ட காலத்திலோ, அல்லது Socialism என்ற ஜனங்கள் க்ஷேமத்தை அடைவதில் ஸமபாத்தியஸ்தர்கள் என்ற கொள்கையைக் கொண்டாடும் சபையின் அங்கத்தினராகயிருந்து உழைத்து வந்த காலத்திலோ, அல்லது பிரஹ்மக்ஞான சபையைச் சேர்ந்து ஜீவன்முக்தர்களாகிய மகரிஷிகளின் ஆக்ஞையைச் சிரமேற்கொண்டு இடைவிடாது, உலக நலத்தைக்கருதுகிற தற்காலத்திலோ, அவர்களால் அனுசரிக்கப்படும் மார்க்கம் ஒன்றே. அது நிஷ்காம கருமயோகமாகும். இக்கருமயோகியின் முக்கிய லக்ஷணங்கள் ஸத்தியம், தைரியம், இடைவிடா முயற்சி, சகல ஜீவராசிகளிடமும் ஏற்பட்ட அனுதாபம், பிரேமையுமேயாம். இவர் இந்தியாவிற்கு 1893மவருஷம் கடைசியில் வந்தனர். சென்ற 24 வருஷங்களாக இவரைப்போல் நமது தேசத்திற்கு உழைத்தவர் எவருளர்? இப்பொழுது நம் தேசத்தில் வியாபித்திருக்கும் கிளர்ச்சிக்குக் காரணம் அவரல்லவோ? அவருடைய பலம் யாதென்று அறிவது தற்சமயத்தில் உசிதமாகும். அந்த பலத்திற்கு பிரஹ்மபலம் என்று நம்முடைய முன்னோர்கள் சொல்லுவார்கள். பூர்வகாலத்தில் மகரிஷியாகிய வசிஷ்டருக்கும் க்ஷத்திரிய வீரராயிருந்து தபவின் பெருமையை அறியாத விசுவாமித்திருக்கும் உண்டான கோரமான யுத்தத்தில் வசிஷ்டரின தபஸின்

தேஜஸையும் பலத்தையும் உருவப்படுத்தினாற்போல் நின்ற பிரஹ்மதண்டமானது விசுவாமித்திருடைய க்ஷத்ரபலத்தைத் தாங்கி தோல்வியடையச்செய்ததனால் விசுவாமித்திரானவர் "க்ஷத்திரியபலம் மிகவும் அற்பமானது, பிரஹ்ம தேஜஸே மிக உயர்ந்தது. பிரஹ்மதண்டம் ஒன்றிலேயே என்னுடைய பலவகையான அஸ்திரங்கள் அடக்கப்பட்டன. ஆகையால் நான் இந்திரியங்களை ஜயித்து சித்தசுத்தியுடன் பிரஹ்மபலத்தை அடையத் தபஸ் செய்வேன்" என்று சொன்னதாக நமது பூர்வ கிரந்தங்களில் பிரஹ்மபலத்தின் மகிமை கூறப்பட்டிருக்கிறது. இப்பிரஹ்மபலமானது மூன்று விதமாய்ப் பிரகாசிக்கத்தக்கது. ஆத்மாவின் சக்திகள் இச்சை, கிரியை, ஞானம், என்று மூவ்விதமாய் பரிணமிக்கின்ற காரணத்தினால் கருமயோகியினுடைய பிரஹ்ம பலமானது செய்கை மூலமாயும், ஞானயோகியின் பிரஹ்ம பலமானது ஞானத்தைப் புகட்டுகின்ற உபதேசவாயிலாகவும், பக்தியோகியினுடைய பிரஹ்ம பலமானது ஈசுவரினிடத்திலும் ஈசுவரனுடைய அம்சமானது வெளித்தோன்றும் ஜீவராசிகளிடத்தும் காட்டும் பேரன்பின் மூலமாயும், அறியத்தக்கது. அன்னிபெஸண்டு அம்மையார் என்ற கருமயோகியின் மூலமாய் இக்கிளர்ச்சியானது நமது தேசத்தில் தோன்றி விகாஸத்தை யடைந்து வருகிறபடியால் இக்கிளர்ச்சியானது ஸ்தூல இயல்பைச்சார்ந்ததல்லவென்றும் சூக்ஷ்மலோகங்களிலிருந்து உண்டாயிற்றென்றும் அறிய உலகத்தினுடைய விகாஸ முறையானது ஈசுவரனது கைங்கரியங்களைச் செய்பவர்களாய் விகாசமுறையில் இச்சை, கிரியை, ஞானம், என்ற மூன்று மார்க்கங்களில் பரிபூரணத்தை அடைந்த ஜீவன் முக்தர்கள் நிலைமையோடு கூடிய பெரியோர்களின் பாதுகாப்பிலிருந்துகொண்டிருக்கிறது. அப்பெரியோர்களின் தலைமையைப் பூண்டவர்களை பகவத்கீதை முதலிய நம்முடைய பூர்வகிரந்தங்கள் ஸநாதனர்களாகிய நால்வர்களென்றும் ஸநகாதி மகாமுனிகளென்றும் கூறுகின்றன. அவர்களுக்குக் கீழ் மனுவென்றும் ஜகத்

குரு அல்லது வியாஸரென்றும் அதிகாரத்தை வகித்த பெரியோர்கள் உலகாபிவிர்த்திக்குத் தக்க முறைகளை ஏற்படுத்தியும், அவைகளைக் கால இயற்கைக்குத் தக்கவாறு மாற்றியும், விருத்தி செய்தும், உலகத்தில் சமயோசிதமான காலங்களில் பற்பல கிளர்ச்சிகளை உண்டுபண்ணக்கூடிய சூக்ஷ்ம சக்திகளால் உலகத்தை நிரப்பச் செய்தும், அச்சக்திகளை ஜனங்கள் உபயோகிக்குமாறு போதிக்கவும், அச்சக்திகளைப் பரவச்செய்யவும், அவைகளினால் உலகமானது போஷிக்கப்படவும், தங்களுடைய சிஷ்யர்களை பற்பல காலங்களில் உலகத்தில் ஜனிக்கும்படி செய்கிறார்கள். அப்பிரதான சிஷ்யர்களில் நமது அக்கிராசனாதிபதியாகிய பெஸண்டு அம்மையார் ஒருவராய் இருக்கின்றனர். நூதனமான உலகத்தைச் சிருஷ்டிக்கின்ற ஈசுவரன் 'அஹம் காலோஸ்மி' என்ற கீதாவாக்கியத்திற் சொல்லுகிற பிரகாரம் சீர்குலைந்த பழைய உலகத்தை நாசம் செய்து புதிய உலகத்தை நிர்மிக்கின்றார். அதற்காக அவர் காலரூபமாய் ஐரோப்பிய கண்டத்தில் கோரமான யுத்தத்தை உண்டுபண்ணி மற்ற தேசங்களில் முன்ரூபங்களை அழித்து நூதன ரூபங்களை ஏற்படுத்தத்தக்க சக்திகளைத் தோன்றச் செய்து உலகத்தைப் புதிதாக நிர்மாணம் செய்து வருகிறபடியால் தற்கால விஷயங்களை நன்று ஆலோசித்து அறியவேண்டும். ஆகையால் உலகமுழுதும் பரவி நிற்கின்ற இக்கால இயல்பை இந்தியாவானது கைக்கொள்ளாமல் இருக்கக்கூடுமா? அக்கால இயல்பை சூக்ஷ்ம திருஷ்டியால் நன்றாய் அறிந்து அதற்குத் தக்கவாறு இந்தியர்களை விகாஸமுறையில் நடத்துவதற்கு பூர்வஜனம வாசனைகளாலும், இந்த தேசத்தைப் பல ஜன்மங்களில் ஜென்மபூமியாகக் கொண்டு இந்த ஜன்மத்தில் அபிமானத்தால் ஜென்மபூமிபோல பாவித்து நமது மதம், சிஷ்டாசாரம், தத்துவக்ஞானம், முதலியவைகளில் இந்தியர்களைக் காட்டிலும் அத்தியந்த விசுவாசம் வைத்தும், ஞான முதிர்ச்சியினாலும், ஆத்மசக்தியாலும், பரிபூரண அன்பினாலும், தகுதியானவர் அன்னிபெஸண்டு அம்மையாரைக் காட்டிலும் எவருளர்? அவர் நமது தேசத்திற்குச் செய்யும் கைங்கரியத்திற்கு ஏற்ற கைம்மாறும் அவ

ர்து பிறந்த நாளைக்கொண்டாடுவதற்கேற்ற முறையும் யாதெனில், அவர் இத்தேச க்ஷேமார்த்தமாய் உழைத்து பல விதப்பிரவிருத்திகளில் அதாவது மதம், வித்தை, ஆசார சீர்திருத்தம், ராஜரீக சீர்திருத்தம், முதலியவைகளில் நம்முடைய சக்தி, அவகாசம், சந்தர்ப்பம், மனோபாவம், இவைகளுக்குத்தக்கவாறு எந்த பிரவிருத்தி நமக்குத்தகுதியென்று தோன்றுகிறதோ அதில் பிரவேசித்து மனப்பூர்வமாய் நமது சரீர பலத்தையும் திரவியத்தையும் மனச்சக்தியையும் உபயோகித்து அவர் இத்தேச அபிவிருத்தியில் கருதும் உயர்தர லக்ஷியங்களை காரியமாக வெளித் தோன்றுவதற்கு முயலுவதேயாம். ஆகையால் அவருடைய 71-வது அப்தபூர்த்தியாகிய நாளிது அக்டோபர் மீ 1௳யில் அவ்விரததை அனுஸரிப்பதாக நாம் ஸங்கல்பம் செய்வோமாக!

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

சமாசாரம்.

மதுரையில் விக்டோரியா எட்வர்டு ஹாலில் நாளிது அக்டோபர் மீ 1௳ மாலை 6 மணிக்கு வெகு விமரிசையான கொண்டாட்டம் நடைபெற்றது. அன்று மாதுஸ்ரீ அன்னிபெஸண் டம்மையாரும் மாஹான் காந்தியும், ஸ்ரீமான் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்களும் பிறந்த நாளாகையால், தேசபக்த சிகாமணிகளாகிய இம்மூவருடைய பிறப்பு நாளைக் கொண்டாடினார்கள். மதுரையில் சிறிது காலமாக தமிழிலேயே சகல பொதுஜனச் சந்திப்புகளின் நடபடிக்கைகளும் பேச்சுகளும் நடைபெற வேண்டுமென்று தீர்மானித்து நடத்தி வருகிறார்கள். இது பொது ஜனங்கள் நிரம்பக்கூட ஏதுவாகிறது. ஆகையால் அந்தப்பெரிய சபாமண்டபம் நிறையும்படி ஜனங்கள் கூடினார்கள். உள்ளே இடமில்லாமல் பக்கங்களிலும் நின்றார்கள்.

அவ்வயம் பிரஹ்மஸ்ரீ எம். நாராயணசாமி ஐயர் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். திருப்பூரில் வக்கீலாயிருந்து உழைக்கத் திறமையும் உடலில்வலிமையும் இருப்பதைப் பொதுஜனப்பிரயோஜனத்துக்காக உழைப்பது மேன்மையென்பதைத் தன் நடத்தையால் நிரூபித்தவரும் சிலகாலமாய் மதுரையில் உழைத்து வரு

கிறவருமான பிரஹ்ம ஸ்ரீ அனந்தநாராயண சாஸ்திரிகள் அமிருததாரைபோல வாக்பிரவாகத்தால் அன்னிபெஸண்டம்மையவர்கள் பெருமையை விளக்கினர். பிறகு ஸ்ரீமான் வக்கீல் ஆர். ரெங்கசாமி ஐயர் அவர்கள் ஸ்ரீமான் மோஹனதாஸ் கரம்சந்த் காந்தியவர்கள் சரித்திரத்தைப்பற்றிக் கூறினர் பிறகு அதே விஷயமாய் ஸ்ரீமான் ஸ்ரீராமன் செட்டியாரவர்கள் பேசின உடன், ஸ்ரீமான் வி. ராமசந்திர ஐயர், மணி ஐயர், அவர்களுடைய பிரபாவத்தைப்பற்றியெடுத்துரைத்தார். 75-ஆம் வயதில் வாலிபர் கூட பிரமிக்கும்படியாய் அசகாயமாய் இவர் செய்த அற்புதமான வேலையின் பெருமையையும், எல்லாரும் ஒன்றும் செய்யத் தெரியாமல் திகைத்து மௌனமாய் நின்ற சமயத்தில் ஒரு சிம்ஹம்போல் கர்ஜித்து யார் வந்தாலும் சரி, என்ன கெடுதிவந்தாலும் சரி, தான் ஒருவராயிருக்கவேண்டியிருந்தாலும் சரி, அன்னையவர்கள் செய்த வேலையைச் செய்வேன் அவர்களை மீட்டாமல் தூங்கேன் என்ற தீவிர விரதம் பூண்டு, பத்திரிகைகளில் எழுதியதையும் இந்தியாவில் எல்லாரும் அவர்கள் செய்த பிரதிக்ஞையை ஆமோதித்துப் பின் பற்றியதையும், மஹான்களின் கிருபையாலும் ஈசுவர கடாக்ஷத்தாலும் இவர் கோரிய காரியத்தை நிறைவேற்றியதையும் பற்றி எடுத்துரைத்தார். மணி ஐயரவர்கள் தான் இதைச்செய்தாரா அல்லது அவர் மூலம் பெரியவர்களுடைய சக்தியானது பிரவேசித்து அங்ஙனம் விளங்கிற்று என்று சந்தேகித்தார். அப்பால் ஸ்ரீமான் அ. ரெங்கஸ்வாமி ஐயர் சில வார்த்தைகள் சொன்னர். அக்கிராசனபதி மூவருக்கும் நம்முடைய சந்தோஷகரமான உபசாரங்களைத் தந்தி மூலமறிவிக்கவேண்டுமென்ற தீர்மானத்தை பிரேரிக்க சபையோர் அங்கீகரித்தார்கள். இவ்விதமாக மங்களகரமாய் இவ்விழாவானது நடைபெற்றது.

1917ளு அக்டோபர்மீ 1உ மாலை 6-30 மணிக்கு வேதாரணியம் வேதவிசார பிருஹ்மஞான சங்கத்தின் பிரஸிடெண்டாகிய மகா-ள-ள-ஸ்ரீ V. N. நடராஜஐயர் அவர்களின் ஜாகையில் ஷை சங்கத்தின் அங்கத்தினர்கள் இன்னும் மற்ற அநுதாபர்களுடன் கூடி மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மைஅவர்களின் ஜன்மதினக்கொண்டாட்டம நடத்தினர்கள். அச்சமயம் "அவதாரம்" என்ற விஷயத்தை பூர்ணசந்திரோதயம் பத்திரிகையிலிருந்து வாசிக்கப்பட்டதோடு கூட "மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மை அவர்கள் நீடூழிகாலம் வாழ்க" என்று பிரார்த்தனைகளும் இவ்வூர் வேதாரண்யேசுவரஸ்வாமிக்கும் வீணவாத விதூஷணி அம்பாளுக்கும் அர்ச்சனைகள் செய்யப்பட்டன. பிரஸாதமும் மாதுஸ்ரீ அன்னிபெஸன்ட் அம்மாள் அவர்களுக்கும் அனுப்பப்பட்டது. சுபம்.

ஆலங்குடி புதுக்கோட்டை ஸமஸ்தானம்:—இவ்வூர் நக்ஷத்திரக்கிளைச் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் நக்ஷத்திர சங்கத்தின் ரக்ஷகரான ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மை அவர்களின் 71-வது பிறந்த நாளும் கொண்டாடப்பட்டது.

அன்று அதிகாலையில் கிளைச்சங்கத்தின் ஆசிகளை ரக்ஷகருக்குத் தந்திமூலமாய்ச் சங்கத்தின் தலைவரால் தெரிவிக்கப்பட்டது. அன்று மாலை 6—45-க்கு ஷை ஊர் பெரிய வர்த்தகரும் அரிசி யந்திரம் வைத்திருப்பவருமான வெங்கடராமன் செட்டியார் அவர்களின் அரிசி யந்திரக் கட்டடத்தில் சங்க அக்கிராசனர், காரியதரிசி, உப காரிதரிசி, அங்கத்தினர்கள், உள்ளூர் கனவான்கள் ஆக 100 பேர்களும் 12 பெருமாட்டிகளும் கூடினார்கள். மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரின் படத்துக்கு மாலை போட்டு அதை எல்லாருக்கும் தெரியும்படியான இடத்தில் வைக்கப்பட்டிருந்தது. ஆலங்குடி ஸர்க்கார் பள்ளிக்கூடத்தில் தலைமை உபாத்தியாயரும் பொது நன்மையைக் கோரி உழைப்பவருமான ஸ்ரீமான் கே. வெங்கடராம ஐயர் ஷையூர் பெண்பாடசாலைப் பாட்டு வாத்தியார் நாகரத்தினமையர் இவர்கள் மேற்பார்வையில் ஆர்மோனியத்துடன் பள்ளிப் பிள்ளைகள் கடவுள் வாழ்த்துப் பாடினார்கள். இரண்டு சிறு பெண்கள் ஆர்மோனியத்துடன் ஜகத்குரு ஸ்தோத்திரத்தைப் பாடினார்கள். கிளைச் சங்கத்தின் தலைவரும் பிரிட்டிஷ் இலாகாவில் பென்ஷன் பெற்றுவரும் மாஜி தாசில்தாருமான கே. எஸ். இராமச்சந்திர ஐயரவர்கள், தான் ஆலங்குடியிலும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களிலும் லோக குருவின் வரவைப்பற்றிச் செய்திருக்கும் வேலை விஷயமாய் எடுத்துச் சொன்னார்கள். இக்கிளைச் சங்கத்தின் பல அங்கத்தினர்களின் முயற்சியால் 1650 அங்கத்தினர்கள் நக்ஷத்திர சங்கத்தில் ஆலங்குடியிலும் அதின் பக்கங்களிலுமுள்ள இடங்களிலும் சேர்ந்திருக்கிறார்கள்.

இக்கிளைச்சங்கத்தின் 1916—17 வருஷாந்திர அறிக்கையை புதுக்காரியதரிசி ஸ்ரீமான் ரெங்காச்சாரியார் வாசித்தார். நக்ஷத்திரச் சங்க விஷயமாகக் கிளைச்சங்கத்தின் 3 மெம்பர்கள் சம்பாஷணை செய்தார்கள்.

பிரிடிஷ் இலாகாவில் பென்ஷன் பெற்றுவருபவரும் ஸ்ரீமான் நாராயணஸாமி ஐயரவர்கள் மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மை அவர்களைப்பற்றி உபந்யாசம் செய்தார்கள்.

ஸ்ரீமான் முத்துக்கிருஷ்ணஐயர் வந்திருந்த கனவான்களுக்கும் பெருமாட்டிகளுக்கும் வெங்கடராமன் செட்டியார் அவர்களுக்கும் வந்தனங்கூறினார். புதுக்கோட்டை ராஜாங்க வாழ்த்து பாடப்பட்டது. வந்திருந்தவர்களுக்கு வெற்றிலைபாக்கும் சர்க்கரையும் விநியோகம் செய்யப்பட்டது.

பிரபத்தி வித்யை.

தர்மம் என்ற பதத்திற்குச் சரியான அர்த்தத்தைக் கொடுக்கும் ஆங்கிலப்பதம் எப்படி இல்லையோ அதைப் போல் பிரபத்தியென்ற சப்தத்திற்கும் சரியான பொருளைத் தரும் பதத்தை ஆங்கிலத்தில் காணுவது அரிது. என்றாலும், 'அடோன்மெண்டு' (at-one-ment) என்ற பதத்தையே ஏகதேசம் பிரபத்தியின் அர்த்தத்தைக் கொடுக்கக் கூடியதாய்ச் சொல்லலாம். ஆனால் சாதாரணமாகக் கிரிஸ்தவர்கள் அப்பதத்தை உபயோகிக்கும்போது தவறான அர்த்தம் கொடுக்கும்படி பிரயோகிக்கிறார்கள். அந்த அர்த்தத்தில் உபயோகப்படுத்தாமல் ரஹஸ்யார்த்த கிரிஸ்தவ மதத்தில் உபயோகப்படுத்தப் பட்டபடி "அடோன்மெண்டு" என்ற பதத்தின் அர்த்தத்தை அறிவோமானால், பிரபத்தியின் அர்த்தத்தையும் அறியலாம். இரண்டுக்கும் "ஒருமையாக ஆகும் தன்மை" என்று அர்த்தம். அப்படியானல் யாருடன் யார் ஒன்று சேருகிறது என்று கேள்வி உதிக்கிறது. பிரபஞ்சத்தின் ஆத்மாவென்று சொல்லக் கூடிய பரமாத்மாவுடன் மனிதனிடத்தில் விளங்கும் சைதன்யமாகிற ஜீவாத்மா ஐக்கியம் பெறுவது தான் என்ற மறுமொழி ஒரு யோகிக்குத் தோன்றும். அத் தன்மையும் இத் தன்மையும், அக் குணமும் இக் குணமும் ஒன்றாயாவது தான் அடோன்மெண்டு; அதுவே பிரபத்தி. இச் சேர்க்கையைத் தான் யோகம் என்பார்கள். இவ்வாறு ஒருமைப்பட்டால் ஈசுவரனுடைய சங்கற்பம், ஆனந்தம், ஞானம், இவைகளுடன் யோகியானவன் தன்னுடைய சங்கற்பம், ஆனந்தம், ஞானம் இவைகளை ஒருமைப் படுத்துவான். அப்போது அவனுக்குத் தான் தனக்காகவே இருக்கிறான் என்ற எண்ணம் நசித்துப்போகிறது. தான் வேறு இதரர்கள் வேறு என்ற எண்ணம் நீங்குகிறது. பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களிலும் தன்னையே பார்க்கிறான். தன்னிடத்திலும் பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களைப் பார்க்கிறான். சுகப்

பிரஹ்ம ரிஷிக்கும் வாமதேவருக்கும் உண்டான உணர்வு இவனுக்கும் உண்டாகிறது. இவன் கீழான மூன்று உலகங்களையும் தாண்டிவிட்டான். இவனுக்கு மஹர் லோகத்துக் குரிய ஸமத்துவ புத்தி யுண்டாய் விட்டது. அதற்கும் மேற்பட்ட ஆத்ம பிரக்ஞையும் எட்டி விட்டது. இவனுடைய பிரபையானது பிரபஞ்ச முழுதும் வியாபிக்கிறது. இவன் ஈசுவரனுடன் அவருடைய நியதிக்கு ஒத்து வேலை செய்கிறவனுய்விட்டான். சர்மானியர்களைப்போல் இவன் தனக்கு மட்டுமாவது அல்லது தன் குடும்பத்துக்கு மட்டுமாவது ஜீவிக்கிறவனல்ல. இவன் பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களின் பொருட்டும் ஜீவிக்கிறவனுகின்றன். இவன் பிறப்பையும் இறப்பையும் ஜயித்தவன். இவனுக்கு இஷ்டமிருந்தால் பிறப்பான். இல்லாவிடில் இல்லை. கர்மமானது இவனைக் கட்டுப்படுத்தாது. பிரபத்தி வித்யையின் முடிவு இவ்வளவு பெருமை பொருந்தியது. இதற்கு நியாஸ வித்யை யென்றும் பெயருண்டு.

இனி பிரபத்தி என்னும் சப்தத்தின் தாது அர்த்தத்தை விசாரிப்போம். "ப்ர" என்றுல் விசேஷமாக என்று பொருள். பத்தி என்பது पद् என்ற தாதுவில் உற்பத்தி. पद् என்றுல் அடைதல் என்று அர்த்தம். பிரபத்தி என்றுல் தான் பிரபஞ்ச பரமாத்மாவிலும் அதிலுள்ள சகல ஜீவகோடிகளிலும் வேறு என்ற பாவனை இல்லாமல் தானே அவைகள் அவைகளே தான் என்ற பாவம் தான். அதாவது ஈசுவரன் யாவருக்கும் தந்தை. சகல ஜீவர்களும் சகோதரர்கள் என்ற பாவனையும் உணர்வுமாம். இவ் வுணர்வுகளுக்கு பகவத் கீதையில்

ममैवांशो जीवलोकः जीवभूतः सनातनः

என்ற சுலோகம் தான் பிரமாணம். (प्र) ப்ர என்ற எழுத்திற்கு இன்னும் ஒரு விசேஷமான அர்த்தமுமுண்டு. அதாவது சர்வத்தையும் பரித்யாகம் செய்து ஈசுவரனைச் சரணம் புகுவது தான். பரித்தியாகமாவது பரித்தியாகார்த்தமே செய்யவேண்டும், ஏதேனும் பலத்தை உத்தேசித்தாவது அல்

லது ஒருவிதமான சந்துஷ்டிக்காகவாவது செய்யக்கூடாது. ஸ்ரீமத் இராமாயணத்தில் பலவிடங்களிலும் இப்பிரபத்தி சாஸ்திரம் விளங்குகிறது. பகவத் கீதையானது பிரபத்தி சாஸ்திரமே. அது குருக்களுக் கெல்லாம் குருவும் லோகங்களுக் கெல்லாம் ஒரே ஆசாரியனுமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அருளிச் செய்தது. அர்சுனன் தனக்கும் தன்னைப் போலொத்த மானிடர்களுக்கும் பிரதிநிதி ஸ்தானத்தில் ஞானமும் பிராப்தியும் அடையவேண்டுமென்று அதியாசக்தியுடன் குருவின் ஹிருதய வாசலின் கதவை யிடிக்க அக்குரு ஸ்தானத்திலிருந்து ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்சுனனை மனுஷ்யவர்கத்துக்குப் பிரதிநிதியாகப் பாவித்துத் தன் சிஷ்யனைச் செய்துகொண்டு தானே இப்பிரபத்தி வித்தையை யுபதேசம் செய்த வொரு மகா கீதம். சிஷ்யன் தயாரானல் குரு தயாராவர் என்ற பிரசித்த வாக்குப்படி, சிஷ்யனை அர்சுனன் ஆயத்தமானதும் குருவான ஸ்ரீ கிருஷ்ண பகவானும் ஆயத்தமாகி கீதோபதேசம் செய்தார். குரு அண்டவேண்டுமானல் சீடனுடைய ஹிருதய கமலத்தின் இதழ்கள் திறக்கவேண்டும். திறந்தால் தான் குரு பிரவேசிப்பார். ஞான ஊத்தின் கண் ஞான நீரைப்பருகவேண்டுமென்று விருப்பமுள்ள சீடனின் மனோபாவம் எப்படி இருக்குமென்பதை அடியில் கண்ட கீதா சுலோகமானது நன்ருய் விளக்குகிறது.

कार्पण्य दोषोपहत स्वभावः ।
पृच्छामि त्वां धर्म संमूढ चेताः ॥
यच्छ्रेयस्यान्निश्चितं ब्रूहि तन्मे ।
शिष्यस्तेहं शाधिमां त्वां प्रपन्नं ॥

இச் சுலோகத்தில் நர நாராயணர்களில் நரனை அர்சுனன் தன் சுபாவமான தெய்வத் தன்மையை மறந்து, கர்மம் என்னவென்று தெரியாமல், மனம் குழம்பி, அதைரியப்பட்டு, நாராயணுவதாரமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானை நோக்கித் தனக்குத் தர்மத்தை உபதேசம்செய்யும்பொருட்டுத் தன்னை சிஷ்யனுக ஏற்றுக்கொண்டு காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித் தான். அர்சுனன் "கலி பிறந்துவிட்டான். அக்

காலத்தில் தர்மம் யாதென்று அறியாதவர்களாய் மானிடர் தவிப்பார்களே. அவர்களுக்குத் தர்மம் என்னவென்று தெரியவேண்டுமே" என்று பரிதபித்து அவர்களுக்குப் பிரதிநிதியாய் தர்மோபதேசத்தைப் பிரார்த்தித்தான். இச்சுலோகத்தில் 'பிரபன்னம்' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப் பட்டிருக்கிறது. அதன் தாத்பரியமாவது குருவாகிய பகவானுடைய திருவடிகளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஸர்வத்தையும் திபாகம் செய்துவிட்டு சரணமடைவது தான்.

शिष्यस्तेहं शाधि मां त्वां प्रपन्नम् ।

என்ற வார்த்தைகளையும் கவனிக்கவேண்டும். 'நான் உன் சிஷ்யன். என்னைக் காப்பாற்றவேண்டும்' என்று அர்த்தம்.

இவ்விடத்தில் நர நாராயணர்கள் விஷயமாய் சொற்ப சமாசாரங்களைத் தெரிவிக்காமல் போனால், பிரபத்தி சம்மந்தமான விசாரணை பூர்த்தியாகாதென்று தோன்றுவதால், அவ் விஷயத்தைப் பற்றிக் கொஞ்சம் பிரஸ்தாபிப்போம்.

இச் சூரிய மண்டலத்திற்குட்பட்ட நம்முடைய பூமியையும் இப்பூ மண்டலத்தில் உள்ள மனுஷ்ய வர்க்கத்தையும் மற்ற ஜீவராசிகளையும் பாதுகாத்து வருகிற மஹான்களுடைய கூட்டம் உண்டென்பது மஹா பாரதத்திலும், இன்னும் அநேக கிரந்தங்களிலும் விளங்குகிறது. இச்சங்கதியை இக்காலத்தில் நாம் மறந்துவிட்டோம். மஹா பாரதத்தில் அக்கூட்டத் தலைவரை நாராயணன் என்று சொல்லப்படுகிறது. அவரே 'சனத்குமார்,' அவரே 'தக்ஷிணாமூர்த்தி' என்று ஹம்ஸயோகி ஸநாதன தர்ம தீபிகை என்னும் கிரந்தத்தில் சொல்லி யிருக்கிறார். ஸாமானியமாய் பதரிகாசிரமம் என்று வழங்குகிற ஸ்தலத்துக்கு வடக்கே உத்தர பதரீவனம் என்று மஹா புண்ய பூமியொன்று உண்டு.

(இன்னும் வரும்.)

வி. கே. தேசிகாச்சாரியார்,

புத்தக விமர்சம்

வேணுகோபாலன்—அல்லது 'குருபக்தி குருமுக்தி'—உத்தமமான விஷயங்களை அடங்கிய ஓர் செந்தமிழ் காவல். இ. வி. நாராயண ஐயர் இயற்றியது. விலை பிரதி ஒன்றுக்கு ரூபா 1. ஆலப்பிழையில் ஸ்தாபிக்கப்பட்டு மாணுக்கர்களுக்கு லௌகிக விஷயமான கற்பினையோடு, மதசம்பந்தமான போதனையையும் கொடுத்து மிகவும் நலம்பயன்றுவரும் ஸநாதநதர்மவித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்து இப்போது திருவாங்கூர் சமஸ்தானம் கோட்டார் சர்க்கார் உயர்தர வித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதராக இருக்கிறவரும் பிரஹ்மக்ஞான சபை, உதய நக்ஷத்திர சபை, அங்கத்தினருமாகிய இப்புத்தகாசிரியருடைய இப்புத்தகத்தைப் படிக்க மிகவும் மகிழ்வுற்றோம். 182 பக்கங்களடங்கிய இப்புத்தகத்தில் ஒரு ஆக்ஷேபணைக்கிடமாகிய பதமாவது, எண்ணமாவது, வாக்கியமாவது இல்லை. இப்புத்தகத்தில் வாசகத்தின் நடையழகும், புதைந்து கிடக்கும் எண்ணங்களின் உயர்வும், கூறப்பட்ட கதையழகும், படிப்போர் மனத்தைக்களிக்கச் செய்கின்றன. இந்தியாவின் அற்புதமான சித்திரங்களையும், சிலா விக்கிரஹங்களையும், மற்ற தேசத்துச் சித்திரங்கள் சிலா விக்கிரஹங்களுடன் ஒத்துப்பார்த்தால் பின்னர்க் கூறியவை உலகத்தில் பார்க்கும் உருவங்கள், வஸ்துக்களைப் போல்வனவாய் அவைகளை ஒத்திருக்கின்றனவா என்ற பிரமாணத்தால் மதிக்கக் கூடுவனவாய் இருக்கின்றனவென்றும், ஆனால் இந்தியச் சிற்பிகளின் வேலைப்பாடுகளோ, இவ்வுலகத்தில் நிகழ்வனவற்றை மறுபடியும் சித்திரச் சேலையிலோ பளிங்கிலோ கருங்கல்லிலோ உண்டாக்குதல் நோக்கமாயிராமல், இந்தியச்சிற்பிகள் தாங்கள் உயர்ந்த மனோ பாவனையால். மனக்கண்ணால் கண்ட உயர்லக்ஷ்யங்களை இந்நிலவுலகிலுள்ள மாந்தர் மனத்தில் பதியவைத்தற்குச் சாதனமாகயிருக்கும்படி ஓவியம் தீட்டியும், சிற்பம் வகுத்தும் வந்தனரென்றும், எம்மட்டிலும் இந்தியச் சிற்பிகளால் நிர்மிக்கப்பட்ட சிற்பங்கள் பார்ப்போர் மனத்தை உயர்லக்ஷ்யங்களை அவாவி அணுகும்படி செய்யவல்லனவோ அம்மட்டும் அவைகள் உயர்ந்தனவாகக் கொள்ளப்படுகின்றனவென்றும், அறிஞர் கூறுகின்றனர். அங்ஙனமே இந்தியர் புராதனக்காவியங்களும், இதிகாசங்களும் மேற்கூறிய நோக்கங்கொண்டே எழுதப்பட்டனவென்றும், அறியத்தக்கது. என்னென்றால் சிற்பம் என்பது சிலையடித்தல், சித்திரம் வரைதல்

என்ற இரண்டுக்கு மட்டும் உபயோகப்படுத்தக்கூடிய சொல் அல்ல. சங்கீதம், சிருத்தியம், காவ்யம், முதலியன வெல்லாம் அச்சொல்லாலே குறிப்பிடப்படுகின்றன. 'ரவிகனு'யிருக்கப்பட்ட ஒருவனுடைய மனதைத் திருப்தி பண்ணக்கூடியது ஒவ்வொரு மனிதனுடைய எண்ணங்களையும் உயர்த்தக்கூடியதாக இருக்கவேண்டுமென்று நம் முன்னோரது கொள்கை. உலகத்தில் காண்பதையும் காணக்கூடியதையும், மறுபடியும் புத்தகத்திலும் படத்திலும் வரைவதில் மட்டும் பிரயோஜனம் யாதுளது? பிரயோஜனமற்ற காரியத்தில் புத்திசாலியானவன் பிரவிருத்திக்கமாட்டான்.

மேற்கூறிய பிரமாணத்தைக் கொண்டு, இப்புத்தகத்தைப்படிக்குங்கால் அதன் உயர்வையும், அழகையும், உண்மையையும், உள்ளபடி அறிகிறோம். வேணுகோபாலனும் இராமசந்திரனும் இரண்டு தோழர்கள். பரமஞானியாயும் குருவுக்கு வேண்டிய சகல குணங்களும் வாய்க்கப் பெற்றவருமான ஆசாரியனிடத்தில் வித்யாப்பியாசம் செய்தனர். வேணுகோபாலனுக்குக் காலக்கிரமத்தில் உத்தம லக்ஷணங்களும், சிலாக்கியமான சகல குணங்களும் பொருந்திய கன்னிகையை மணக்கும் பாக்கியம் கிடைத்தது. அப்பால் இத்தம்பதிகள் புருஷனுடைய கிராமத்திலிருந்து மனைவியினகத்துக்குச் செல்லும் வழியில, கள்வரால் மடக்கப்பட்டு, கொள்ளை யடிக்கப்பட்டு சிறையிடப்பட்டனர். இத்துடன் நங்கையும், நம்பியும், பிரிக்கப்பட்டு, சொல்லொணுத் துன்பத்துக் குள்ளாக்கப்பட்டனர். இத் துன்பங்களுக்குட்பட்டுக் கிடக்கும் காலத்தில் எவ்வாறு இருவரும் கஷ்டங்களைச் சகித்து மனதைத் திடப்படுத்திக் கொண்டனர் என்பதும், மங்கையைக கள்வர் தலைவன் தன்னை மணக்கும்படி நிர்பபந்திக்க எங்ஙனம் அன்னவள் தன் கற்பைக் காப்பாற்றினள் என்பதும், கள்வரிடம் அகப்பட்ட சிநேகிதனையும், அவன் மனைவியையும், கண்டுபிடிக்காமல் வீட்டுக்குத் திரும்புவதில்லையென்ற விரதத்தோடு இராமசந்திரன் புறப்பட்டுக் கஷ்டப்பட்டு அலைந்து திரிவதும் கடைசியில் ஸதிபதிகள் இருவரும் தனித்தனியாய்த் தப்பிவருவதும், இருவரும் ஒருவரையொருவர் சேர்ந்த ஆனந்தமும், பின்னர் சினேகிதனோடு கூடுதலும், வெகு அழகாய்க் கூறப்பட்டிருக்கின்றன. மங்கையைக் காதலித்த கள்வர் தலைவனும் நாளுக்கு நாள் தன்னுடைய இழிவையும் அன்னவளின் உயர்வையும அறிந்து, மங்கை தப்பின பிறகு அவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கடைசியில் அவளைத் தேடிச்சென்று அவள்

காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டு, அப்பால் ஆசாரியனுடைய கிருபைக்குப் பாத்திரமாகி அவர் சொற்படி தான் திருடிச்சேகரித்து வைத்திருந்த திரவியத்தையெல்லாம் உலகத்தின் நன்மைக்கு உபயோகமாகும்படி அவரிடம் கொடுத்த விருத்தாந்தம் எவ்வளவு கெட்ட சரிதத்தையுடையவனுக்கும் பெரியவர்களுடைய கிருபை கிடைக்கும் என்றும், ஒவ்வொருவனும் கடைமுறையில் நற்கதியை அடைவான் என்பது ஈசுவர நியதியென்றும் காட்டுகிறது. உலகினுக் குழைப்பது தான் ஜன்மத்தையெடுத்ததற்குப் பிரயோஜனமென்றும் பரோபகாரத்தால் தான் சுகம் கிடைக்குமென்றும், மஹான்கள் எப்போதும் உலகத்தை உய்விக்கும்படி ஜாகரூகர்களாயிருக்கிறார்கள் என்ற தத்துவமும், இப்புத்தகத்தில் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. இதை யாவரும் வாங்கிப் படித்துப் பயனடைவார்களாக.

நீர்ப்பாய்ச்சல்:—கோயம்புத்தூரில் விவசாயக் காலேஜ் தலைமை உபாத்தியாயர் ஆ. ஸெவில் உட் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கிரந்தமிது. சென்னை சர்க்கார் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டது. வியவசாயிகளுக்கு மிகவும் பிரயோஜனகரமானது. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாகத் தண்ணீர் வருவாய்கள் தண்ணீரைப் பாய்ச்சும் விதங்கள் அவைகளின், தாரதம்மியங்கள், தண்ணீர் மிகையாயிருந்தால் அதைக் கடத்தும் விதம் இன்னும் பற்பல முக்கிய விஷயங்கள் எல்லாவற்றையும், சாஸ்திர ஆராய்ச்சியுடன் நன்றாய் எழுதப்பட்டிருக்கிறது. இதைப் போன்ற புத்தகங்கள் தமிழ் முதலான பாஷைகளில் வெளி வந்தால் மிகவும் உபயோகமாகும். இப்புத்தகத்தின் விலை 1 ரூ. வியவசாய இலாகாவில் பிரசுரமாகும் ஆங்கிலப் புத்தகங்களும், தமிழ் முதலிய புத்தகங்களும் மிகவும் உபயோகரமாயிருக்கின்றன.

புதிதாய்க் கண்டுபிடித்த ரோமசங்காரிணி என்னும்

தர்பார் சோப.

இது தேகத்தின் எந்தப் பாகத்திலும் இருக்கும ரோமத்தில் பூசுவதினால் தேகத்தின் சர்பத்திற்கு எவ்வித தொந்தரவில்லாமல் ரோமத்தை எடுத்துவிடும். ஒரு தடவை வாங்கினால் விடமாட்டீர்கள். தேகத்தின் காந்தியும் முன்போலவே நிற்கும். சுபாவமான நிறத்தைக் காப்பாற்றும்படியான சோப் இது ஒன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. எரிச்சல் முதலானதுகள் இல்லை.

வர்த்தகர்களுக்குச் சகாயமாய்க் கொடுக்கப்படும்
ஏஜெண்டுகள் தேவை.

3 கேக் உள்ள பெட்டி 1-க்கு 0—14—0
ஒரே தடவையில் 2 பெட்டிக்கு 1—10—0
தபால் செலவு பிரத்தியேகம்.

தலைமயிர் நரைத்து கிழவர்களைப்போல்
ஏன் காணப்படுகிறீர்கள்!

எங்கள் தர்பார் கேச கலாப்பை

ஒரு தடவை உபயோகிப்பதினால், பித்தத்தினாலோ அல்லது வயதினாலோ மயிர் நரைத்து விடுகிறதைத் தடுத்து பழைய கருப்பு நிறத்துக்கே திருப்பிவிடுகிறது. மற்ற தைலங்களோ வெகு நாள் விடாது தடவி வந்தால்தான் குணம் தோன்றும். இத்தைலத்தையோ 5 நிமிஷம் உபயோகித்தால் முழுக்கருப்பாகிவிடும். நல்ல வாசனையும் வீசும். கிழத்தனத்தைப் போக்கடித்து யௌவனத்தையும் கொடுக்கும். ஒரு தடவை வாங்கினால் உண்மை தெரியவரும்.

புட்டி, புருஷ் உடன் ரூபாய் 1—0—0
போஸ்டேஜ் 0—4—0

விலாசம்

வைரம் அண்டு கம்பெனி
3. இருளப்பன் தெரு மதராஸ்.

பொருத்தமான ஔஷதம்.

அநிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வாராதென்பது கேள்வியல்ல வரத்தான் செய்யும். அப்படி வருவதும் காலத்துக்குப் பொருத்திருக்கிறது.

முதலாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப்பார்களா அல்லது எவ்வித வியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத்தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்க நிக்ஹர மாத்திரை

களை உபயோகித்து நலம் பெறுவார்களா வென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடு களைந்து, மனதுக்கும் தேகத்துக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன அவைகள் ரத்தத்தை சுத்திசெய்து விர்த்தியாக்கி நரம்பு ஸ்தானங்களை உறுதிப்படுத்தி புத்தி தீக்ஷண்யத்தைக் கொடுத்து வீரிய ஸ்கலித ரோகங்களை குணப்படுத்துகின்றன. இவைதான் பலத்தைக் கொடுக்க திவ்வியமருந்து.

மருந்து செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடியவைகள் ஒன்றும் சேர்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரு 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு இனமாய்க் கொடுக்கிறோம்.

ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய அவசியம்.

ஒரு பெரிய வேலை,

எந்த உயர் உத்தியோகஸ்திலிருந்தாலும் கூலிவேலை செய்தாலும் தக்கம் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வதுதான் முதல் வேலை யென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜி,
ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,
45—மேலக்கோபுரவீதி,
மதுரை.